# இலங்கையில் கருத்து வேறுபாட்டின் அடக்குமுறை

# 1 ஜனவரி – 31 மார்ச் 2019



*பிரதிமை - புத்தரின் சிலையொன்று அங்குரார்ப்பணம் செய்யப்பட்ட நீராவி பிள்ளையார் கோவிலின் வாதாடப்படுகின்ற காணியில் பௌத்த மதகுருமார்களுடன் தமிழ் Clftpayhsu;fs; வாதh்டுகின்றனர் – புகைப்பட அனுசரணை - Tamil Guardian*


**INFORM** Human Rights Documentation Centre

www.ihrdc.wordpress.com informcolombo@gmail.com

இலங்கையில் கருத்து வேறுபாட்டின் அடக்குமுறை 1 ஜனவரி – 31 மார்ச் 2019

© INFORM மனித உரிமைகள் ஆவணப்படுத்தல் நிலையம், 2019

கொழும்பு, இலங்கை

## உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள்


**அ. வடக்கில் ஊக்கத்துடன் இயங்குதலுக்கு அச்சுறுத்தல்களும், தடைகளும்**

**ஆ. வடக்கில் தமிழ் ஊடகவியலாளர்களுக்கு அச்சுறுத்தல்களும், தடைகளும்**

**இ. ஒன்றுகூடுவதற்கான சுதந்திரத்தின் மீறல்**

**ஈ. கருத்துச் சுதந்திரத்தின் மீறல்**

**உ. மனித உரிமைகள் குறித்து ஜனாதிபதியின் விமர்சனம்**

**ஊ. சுதந்திரங்களுக்கான உத்தேசமான அச்சுறுத்தல்கள்**


*இலங்கையின் மனித உரிமை மீறல்களை ஆவணப்படுத்தவும் கண்காணிக்கவும் 1990,இல் இன்ஃபோர்ம் (INFORM) நிறுவனம் ஸ்தாபிக்கப்பட்டது .குறிப்பாக இன மோதல்களும் போரும் நிலவிய சூழலிலேயே இது உருவாக்கப்பட்டது .உள்ளூர் ,தேசிய ,சர்வதேச மட்டங்களில் எழுத்துமூலமும் வாய்மொழி மூலமும் இடையீடுகளை மேற்கொள்வதிலும் ,அறிக்கைகளை வெளியிடுவதிலும் ,அது தன்னை ஈடுபடுத்திக் கொண்டது .படிப்படியாகவும் அடிக்கடியும் உரிமைகள் மீறப்படுகின்ற சமூகங்களை மையப்படுத்தி செயற்படுவதிலும் இன்ஃபோர்ம் தன்னை அர்ப்பணித்தது .தற்போது தேர்தல்களைக் கண்காணிப்பதிலும் கருத்துச் சுதந்திரத்திற்காகச் செயற்படுவதிலும் மனித உரிமைகள் காப்பாளர்களை மையப்படுத்தியும் இன்ஃபோர்ம் தன்னை ஈடுபடுத்தி வருகின்றது . இலங்கையில் கொழும்பை மையமாகக்கொண்டு இன்ஃபோர்ம் இயங்கி வருவதோடு ,உள்ளூர் செயற்பாட்டாளர்கள் ,குழுக்கள் வலைப்பின்னல்களுடனும் ,பிராந்திய )ஆசிய (சர்வதேச மனித உரிமைகள் வலைப்பின்னல்களுடனும் நெருக்கமாகச் செயற்பட்டு வருகின்றது*

*இலங்கையின் மனித உரிமை மீறல்களை ஆவணப்படுத்தவும் கண்காணிக்கவும் 1990,இல் இன்ஃபோர்ம் (INFORM) நிறுவனம் ஸ்தாபிக்கப்பட்டது .குறிப்பாக இன மோதல்களும் போரும் நிலவிய சூழலிலேயே இது உருவாக்கப்பட்டது .உள்ளூர் ,தேசிய ,சர்வதேச மட்டங்களில் எழுத்துமூலமும் வாய்மொழி மூலமும் இடையீடுகளை மேற்கொள்வதிலும் ,அறிக்கைகளை வெளியிடுவதிலும் ,அது தன்னை ஈடுபடுத்திக் கொண்டது .படிப்படியாகவும் அடிக்கடியும் உரிமைகள் மீறப்படுகின்ற சமூகங்களை மையப்படுத்தி செயற்படுவதிலும் இன்ஃபோர்ம் தன்னை அர்ப்பணித்தது .தற்போது தேர்தல்களைக் கண்காணிப்பதிலும் கருத்துச் சுதந்திரத்திற்காகச்*

*முறைமையியல்*............................................................................................................................ *4*

*நிறைவேற்றுச் சாராம்சம்*........................................................................................................... *4*

*சம்பவங்களின் அட்டவணை*.......................................................................................................... *6*

**அ. வடக்கில் ஊக்கத்துடன் இயங்குதலுக்கு அச்சுறுத்தல்களும், தடைகளும்.............................................. 12**

1. போதைப் பொருள் செயற்பாடு குறித்து முறையிட்ட பின்னர் கிளிநொச்சி மாணவன் தாக்கப்பட்டான்........................................................................................................ 12
2. பதாகைக்கு இலஞ்சம் கொடுத்ததிற்காக இருவரைப் பொலிசார் கைதுசெய்தனர்.......................... 12
3. ஜனாதிபதியின் விஜயத்தை எதிர்த்த வேளை காணாமலாக்கப்பட்டோரின் குடும்பத்தினர் அச்சுறுத்தப்பட்டனர்.................................................................................................... 13
4. இரவில் “சி.ஐ.டி. அலுவலர்கள்” பலாத்காரமாக வீட்டுக்குள் பிரவேசித்தனர்................................ 14
5. இரணைதீவுக்கு வருகைதந்த செயலார்வலர்கள் பிரவேசிப்பதற்கு இராணுவத்தினால் தடை........ 15
6. இரணைதீவுக்கு செயலார்வலரும், ஊடகவியலார்களும் பிரவேசிப்பதை மறுப்பதற்கு கடற்படை முயற்சி...... ........................................................................................................... 16
7. காணியை விடுவிக்குமாறு கோரிய கேப்பாபுலவு குடும்பங்களுக்கு படையினர் அச்சுறுத்தல்... 16
8. கேப்பாபுலவிலிருந்து போராட்டக்காரர்களை வெளியேற்றுவதற்கான பொலிசாரின் முயற்சி நிராகரிக்கப்பட்டது.................................................................................................. 17
9. இராணுவத்தின் அச்சுறுத்தலின் காரணமாக கூடாரங்களை மூடுவதற்கு கேப்பாபுலவு போராட்டக்காரர்கள் தள்ளப்பட்டனர்........................................................................ 17
10. புலம்பெயர்ந்த குடும்பங்களின் கையொப்ப இயக்கத்தைப் பொலிசார் தடுத்தனர.................... 18
11. போராட்டக்காரர்களை கடற்படை புகைப்படமெடுத்தது.............................................. 19

**ஆ. வடக்கில் தமிழ் ஊடகவியலாளர்க்கு அச்சுறுத்தல்களும், தடைகளும்...................................... 20**

12. ஊடகவியலாளர்கள் பொலிசாரினால் அச்சுறுத்தப்பட்டனர்................................................ 20
13. புத்தரின் சிலையின் நிருமாண அமைவிடத்தில் அச்சுறுத்தலுக்கு ஊடகவியலாளர்கள் முகங்கொடுத்தனர்.................................................................................... 20
14. புத்தரின் சிலையின் திறப்பு விழாவில் ஊடகவியலாளர்கள் அச்சுறுத்தப்பட்டனர்....................... 21
15. முல்லைத்தீவில நீரை வடியச்செய்தல் குறித்த போராட்டங்கள் தொடர்பாகச் செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளர்கள் இராணுவத்தினால் அச்சுறுத்தப்பட்டனர்.................................. 22
16. மன்னார் கூட்டத்தில் ஆளுனரின் பாதுகாப்பு அலுவலர்களினால் ஊடகவியலாளர்கள் அகற்றப்பட்டனர்........................................................................................ 23
17. கோப்பாய் பொலிஸ் பொறுப்பதிகாரியினால் ஊடகவியலாளர் தாக்கப்பட்டார்......................... 24
18. ஊடகவியலாளர் வீட்டில் கொள்ளையடிக்கப்பட்டது................................................. 25

**இ. ஒன்றுகூடுவதற்கான சுதந்திரத்தின் மீறல்.................................................................... 25**

19. தோட்டத் தொழிலாளர்களின் போராட்டத்துடன் இணைந்திருந்த இந்து மதகுருவின் வாகனம் மீது தாக்குதல்.......................................................................................... 25
20. தோட்டத் தொழிலாளர்களின் போராட்டத்தின் அமைப்பாளர்கள் கைது.................................. 26
21. ஆயிரம் ரூபா இயக்க விழிப்பியல் நிகழ்வு மீது தாக்குதல் .......................................... 26
22. வேலையற்ற பட்டதாரிகளின் போராட்டத்தின் மீது தாக்குதல்........................................... 27

23. பல்கலைக்கழக மாணவப் போராட்டக்காரர்களைக் கலைப்பதற்கு கண்ணீர் புகைக்குண்டும், நீர்பீச்சியடித்தலும் பயன்படுத்தப்பட்டன.......... 27
24. மாணவர்களைக் கலைப்பதற்கு பொலிசாரினால் கண்ணீர் புகைக்குண்டு பயன்படுத்தப்பட்டது; IUCF கூட்ட அழைப்பாளர் கைது.......... 28
25. ஆசிரியர்களின் போராட்டம் மீது தாக்குதல்.......... 28
26. சுவர்ணவாஹினியில் புதிதாக அமைக்கப்பட்ட தொழிற்சங்கத்தின் உறுப்பினர்கள் வேலையிலிருந்து நீக்கப்பட்டனர்.......... 29
27. போராட்டக்காரர்கள் மீது குண்டாந்தடித் தாக்குதல்.......... 29
**ஈ. கருத்துச் சுதந்திரத்தின் மீறல்.......... 29**
28. “கோப்பி கடே” தொலைக்காட்சி நாடகத்தின் தொடர்பகுதி தடை செய்யப்பட்டது.......... 30
29. போராட்டம் குறித்து செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளர்கள் அச்சுறுத்தப்பட்டனர்.......... 30
30. பௌத்த சமயத்திற்கான சார்த்துரைக்கப்பட்ட அவதூறு குறித்து சிறுகதை எழுத்தாளர் விசாரிக்கப்பட்டார்.......... 31
**உ. மனித உரிமைகள் குறித்து ஜனாதிபதியின் விமர்சனம்.......... 31**
31. மனித உரிமைகள் செயலார்வலர்களை ஜனாதிபதி தாக்கினார், சட்டத்திற்குப் புறம்பான கொலைகளுக்கான அங்கீகாரத்திற்கு சமிக்ஞை.......... 31
32. பாடசாலைகளில் ஒழுக்கத்தை மனித உரிமைகள் தடுப்பதாக ஜனாதிபதி வலியுறுத்துகிறார்.......... 32
33. அரசியலமைப்புப் பேரவை, மனித உரிமைகள் ஆணைக்குழு என்பன மீது ஜனாதிபதி தாக்குதல்.......... 33
**ஊ. சுதந்திரங்களுக்கான உத்தேசமான அச்சுறுத்தல்கள்.......... 33**
34. திரிபிட்டகாவுக்கு சட்டபூர்வ அங்கீகாரம் வழங்கப்பட்டது.......... 33
35. கண்காணிப்புச் சாதனங்களுக்கு அமைச்சரவையின் அங்கீகாரத்தை ஜனாதிபதி நாடினார்.......... 34

## முறைமையியல்

2019 ஜனவரி 1 இலிருந்து மார்ச் 31 வரை, இலங்கையில் கருத்து வேறுபாட்டின் அடக்குமுறை தொடர்பான சில குறிப்பிடத்தக்க சம்பவங்களின் பொதுவான போக்குகளையும், விபரங்களையும் இந்த அறிக்கை வழங்குகின்றது. சூழமைவினை நிறைவேற்றுச் சாராம்சம் விபரிப்பதுடன், போக்குகளையும் அத்துடன் அரசாங்கத்தினதும், வேறு தொடர்பான தரப்புக்களினதும். சில பொதுவான கண்டுபிடிப்புக்களையும் பகுப்பாய்கின்றது. ஊடக அறிக்கைகள், சமூக ஊடகங்கள் INFORMக்கு அறிக்கையிடப்பட்ட சம்பவங்கள் மற்றும் INFORM பணியாளரினதும், ஊடகங்களினதும் அவதானிப்புக்கள் மற்றும் அனுபவம் ஆகியனவற்றிலிருந்து சம்பவங்களின் ஏற்பாட்டினை INFORM பேணுகின்றது.

இந்த அறிக்கையில், ஏனையோர் மத்தியில் பொலிஸ், ஆயுதப்படைகள், மதக்குழுக்கள் ஆகியனவும் மற்றும் அரசியல்வாதிகளும் உட்பட அரசாங்க அல்லது அரசாங்கம் சாராத கருவிகளின் கைகளில் உரிமைகளின் மீறல்களையும், சமூக அநீதியையும் பதிவுசெய்வதற்கு எதிராக அல்லது முயற்சிப்பதற்கு எதிர்ப்பு, தடை, கீழ்ப்படிய மறுத்தல், சவால் ஆகியவற்றின் செயற்பாடுகளை உள்ளடக்குவதற்கு "வேறுபாடு" என்ற சொல் பரந்தரீதியில் வரையறுக்கப்படுகின்றது. மேற்படி வேறுபாட்டின் செயற்பாடுகளை அடக்குவதற்கு மேற்படி அரசாங்க அல்லது அரசாங்கம் சாராத செயற்பாட்டாளர்களிலான ஏதேனும் முயற்சியாக "அடக்குமுறை" என்ற சொல் வரையறுக்கப்படுகின்றது. உரிமைகளை அரித்துத் தின்னுவதற்கான அதன் ஆற்றலளவின் காரணமாக கருத்து வேறுபாடாக ஏதேனும் வாக்குவன்மையிலான அதைரியப்படுத்தும் மனித உரிமைகள் கருதப்பட முடியும்.

## நிறைவேற்றுச் சாராம்சம்

2018 ஒக்ரோபர் - டிசம்பர் வரையிலான கருத்து வேறுபாடு மீதான INFORMஇன் முன்னைய காலாண்டு அறிக்கை 28 சம்பவங்களைக் கொண்டிருந்தது. 2019இன் முதல் மூன்று மாதங்களை உள்ளடக்கும் இந்த அறிக்கை 35 சம்பவங்களின் விபரங்களைப் பதிவுசெய்கின்றது.

2018ஆம் ஆண்டு முடிவுற்று அரசியலமைப்புரீதியிலான நெருக்கடிநிலையிலான தாக்கங்களினால் 2019 ஜனவரி 1இல் ஆரம்பித்த ஆண்டுக்கான நாதம் குறித்துரைக்கப்பட்டுள்ளதாகத் தோன்றுகின்றது. சம்பந்தப்படுத்தலைப் புரிந்துகொள்வது காரணமாக விளங்காத அதேவேளை, அரசியல் வகுப்பினதும் மற்றும் கடமை குறித்த அவர்களது உதாசீனத்தினதும் மீது பொது மக்களுக்குச் சாட்டப்படக்கூடிய அதிருப்திக்காக அரசாங்க நடவடிக்கைகளுக்கு எதிரான போராட்டங்களில் சிறிதளவு அதிகரிப்பு ஒன்று இருப்பதாகத் தோன்றுகின்றது.

கடந்த வருடம் ஒக்ரோபரில் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்ட பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் நீக்கப்பட வேண்டும் என பல்கலைக்கழக மாணவர்கள் கோரியிருந்தனர். அது இவ்வருடத்தில் மாபெரும் போராட்டத்திற்கு இட்டுச்சென்றது. கண்ணீர்புகைக் குண்டு ஏவப்பட்டும், நீர்பீச்சியடிக்கப்பட்டும் போராட்டம் கலைக்கப்பட்டது. 1979இன் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை நீக்குவதையே பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் உத்தேசமாகக் கொண்டிருந்ததுடன், பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் தற்காலிகமானதொரு பொறிமுறையாக அறிமுகப்படுத்தப்பட்டது, ஆனால், நாட்டின் குற்றவியல் நீதித்துறை முறைமையில் அது ஒரு நிரந்தரமான இணைக்கப்பட்ட அம்சமாக

வந்துள்ளது. பெருமளவு நடைமுறையிலான சட்டங்களையும் மற்றும் பயங்காரவாதத்தையும் குறிப்பிட்டு, பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் நீக்கப்பட வேண்டும் என்றும், பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் மீளப்பெறப்பட வேண்டும் என்றும் ஊடகச் சுதந்திரக் குழுக்கள், அரசாங்க சார்பற்ற தாபனங்கள், தொழிற்சங்கங்கள் ஆகியனவும், வழக்கறிஞர்கள் மற்றும் உரிமைகள் செயலார்வலர்கள் ஆகியோரும் அழைப்புவிடுத்துள்ளன/விடுத்துள்ளனர். பயங்கரவாதம் என கருதப்படக்கூடிய பரந்ததும், நிச்சயமற்றதுமான வரைவிலக்கணங்களைக் கொண்டுள்ள வரைவிலான பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தில் உள்ள ஏற்பாடுகளை இக் குழுக்கள் கண்டித்துள்ளன. அத்தகைய வரைவிலக்கணங்களும், தன்னிச்சையிலான பொருள்விளக்கங்களின் சாத்தியக்கூறும் ஜனநாயகத்திற்கும், கருத்துச் சுதந்திரத்திற்கும் மற்றும் ஒன்றுகூடுவதற்கும், இணைவதற்குமான உரிமைகளுக்கு எதிரானவை என அவை மேலும் சுட்டிக்காட்டியுள்ளன.

இலங்கையில் ஒன்பது மாகாணங்களில், தமிழர்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட வடக்கு மாகாணத்திலேயே ஊக்கத்துடன் இயங்குதலுக்கான பெருமளவு அச்சுறுத்தல்களும், தடைகளும் அறிக்கையிடப்பட்டுள்ளதுடன், இதில் இந்த அறிக்கையில் உள்ள அரைவாசிக்கு மேற்பட்ட சம்பவங்கள் அங்கேயே இடம்பெற்றுள்ளன. காணாமலாக்கப்பட்டோரினதும் மற்றும் தமது காணிகளை மீளளிக்குமாறு போராட்டம் நடத்தியோரினதும் தமிழ் குடும்பங்களே அச்சுறுத்துவதற்கான கருத்தினைக் கொண்ட செயற்பாடுகளின் அமைப்பிலும், போராட்டங்களை இடைநிறுத்துகின்ற அமைப்பிலும் அதிகளவு க~;டநிலைக்கு முகங்கொடுத்தன. மற்றைய இடங்களில் இடம்பெற்ற போராட்டங்களில் போராட்டக்காரர்களை நோக்கி கண்ணீர்புகைக் குண்டினதும், நீர்பீச்சியடித்தலினதும் அமைப்பில் உடல்ரீதியிலான க~;டநிலைக்கு போராட்டக்காரர்கள் முகங்கொடுத்தனர். மாணவர்களினதும், ஆசிரியர் தொழிற்சங்கம் ஒன்றினதும் போராட்டங்கள் மற்றும் சூழலைப் பாதுகாப்பதற்காக நடத்தப்பட்ட போராட்டங்கள் ஆகியனவும் பொலிஸாரினால் தாக்கப்பட்டன.

உரிமைகளின் மீறல்கள் மற்றும் சமூக அநீதி ஆகியன தொடர்பில், தமது பணியினைப் பாதுகாப்பாக நிறைவேற்றுவதற்கு கணிசமானளவு அச்சுறுத்தல்களுக்கும், தடைகளுக்கும் தாக்குதல்களுக்கும் வடக்கில் உள்ள தமிழ் ஊடகவியலாளர்கள் முகங்கொடுத்தனர். இது தொடர்பில் ஏழு அத்தகைய சம்பவங்கள் குறித்து அறிக்கையிடப்பட்டுள்ளன. பொலிஸ் அலுவலர் ஒருவரினால் ஓர் ஊடகவியலாளர் உடல்ரீதியாகத் தாக்கப்பட்ட அதேவேளை, ஏனையோர் ஒன்றில் ஆயுதப் படையினரால் அல்லது பொலிஸாரினால் அச்சுறுத்தப்பட்டனர். தெற்கில் போராட்டமொன்றுக்கு செய்தி சேகரிக்கச் சென்ற வேளை, ஊடகவியலாளர் ஒருவர் அச்சுறுத்தப்பட்டார். ஒரு சிறுகதை எழுத்தாளர் விசாரிக்கப்பட்டு, பின்னர் கைது செய்யப்பட்டார். அரசாங்கத் தொலைக்காட்சி அலைவரிசையொன்றின் மீதான பிரசித்தமான தொலைக்காட்சி நாடக தொடர்பகுதியொன்று தடைசெய்யப்பட்டது. தொழிற்சங்கங்களுக்கும், தொழிற்சங்கவாதத்திற்கும் அச்சுறுத்தும் நகர்வொன்றில், புதிதாக அமைக்கப்பட்ட தொழிற்சங்கமொன்றின் முதலாவது கூட்டத்தில் பங்கெடுத்த தமது ஊழியர்களில் சிலரை தனியார் தொலைக்காட்சி நிலையமொன்று பதவிநீக்கியது.

நாளொன்றுக்கு 1000 ரூபாயால் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களின் ஊதியத்தை அதிகரிப்பதற்கான "ஆயிரம் ரூபா" இயக்கமானது இவ்வருடத்தில் பெருந்திரளான ஒன்றுதிரட்டலைக் கண்டுள்ளதுடன், போராட்டங்களுக்கு விழிப்பியலை உயர்த்திய அதே வேளை, சம்பந்தப்பட்டவர்களிடமிருந்து இயக்கத்தின் அமைப்பாளர்கள் எதிர்ப்புக்கும் முகங்கொடுத்துள்ளனர்.

பொதுமக்களை அறியச்செய்யும் நகர்வொன்றாக கருதப்படும் விதத்தில் திரிபிட்டிகாவுக்கு சட்டபூர்வ அந்தஸ்தை ஜனாதிபதி வழங்கியுள்ளதுடன், இது மதம் தொடர்பில் கடுமையான கருத்து குறித்த மக்களின் உரிமைக்கு உத்தேசமான அச்சுறுத்தலைக் கொண்டுள்ளதால், அச்சங்களை உயர்த்தியுள்ளது. உரிமைகள் மீதான சாத்தியமான கட்டுப்பாடுகளின் தொடராக பாடசாலைகளினதும; அத்துடன் குற்றவாளிகளினதும் தொடர்பிலான போக்கில் தலையீடு ஒன்றாக மனித உரிமைகளை உறுதிப்படுத்துவதற்கு உள்ள பொறிமுறைகளைக் குறிப்பிட்டு மனித உரிமைகளை ஜனாதிபதி பகிரங்கமாகக் கண்டித்தார். நீதிபதிகளின் பதவியுயர்வுக்கு அவரது தனிப்பட்ட பரிந்துரையை அவமதித்தமைக்காக அரசியலமைப்புப் பேரவை உட்பட வேறு நிறுவனங்களை வாய்மொழி மூலம் ஜனாதிபதி சாடினார். என்றுமே சம்பவித்திருக்காத நகர்வொன்றில், காணாமல்போனோருக்கான அலுவலகமானது எல்.ரி.ரி.ஈ. நிகழ்ச்சி நிரலுக்கு ஈடுகொடுப்பதாகவும், தனது வலியுறுத்தலுக்கு ஆதரவளிப்பதற்கு சான்றினை வழங்கவில்லை எனவும் ஜனாதிபதி தெரிவித்தார். 2016 பாராளுமன்றச் சட்டமொன்றினால் காணாமல்போனோருக்கான அலுவலகம் தாபிக்கப்பட்டதுடன், அது 2018இல் தொழிற்பாட்டுக்குக் கொண்டு வரப்பட்டது. சட்டவிரோதமான போதைப்பொருள் வர்த்தகத்தை எதிர்ப்பதற்கு கண்காணிப்புச் சாதனங்களின் கொள்வனவுக்கு பில்லியன் கணக்கான ரூபாய் பெறுமதியான பேரம் ஒன்றுக்கான அமைச்சரவை அங்கீகாரத்தை ஜனாதிபதி நாடியுள்ளதாக அறிக்கையிடப்பட்டுள்ளது. ஊக்கத்துடன் இயங்குதலிலும், போராட்டங்களிலும் சம்பந்தப்பட்டுள்ளவர்கள் அதிகரித்துள்ள கண்காணிப்பினால் ஏற்கனவே இலக்குப்படுத்தப்பட்டுள்ளதாகத் தோன்றுவதனால், மனித உரிமைகள் பொறிமுறைகள் மீது தனது தொடர்ச்சியான வாய்மொழியிலான தாக்குதல்களுடன் இணைந்து ஜனாதிபதியினால் கோரப்பட்டுள்ள சாதனங்களினால் நகரத்திற்குரிய ஈடுபாடும், கருத்து வேறுபாடும் மேலும் மறுதலையாகப் பாதிக்கப்படலாம் என INFORM அச்சமடைகின்றது.

## சம்பவங்களின் அட்டவணை

| | திகதி | இடம் | விவரணம் | ஆதாரம் |
|---|---|---|---|---|
| **அ. வடக்கில் ஊக்கத்துடன் இயங்குதலுக்கு அச்சுறுத்தல்களும், தடைகளும்** | | | | |
| 1. | 31 ஜனவரி | கிளிநொச்சி | போதைப்பொருள் செயற்பாடு குறித்து அறிக்கையிட்ட பின்னர் கிளிநொச்சி மாணவன் மீது தாக்குதல் | https://www.tamilguardian.com/content/kilinochchi-school-student-attacked-after-reporting-local-drug-activity |
| 2. | 3 ஜனவரி | வவுனியா | பதாகைக்கு இலஞ்சம் கொடுத்ததிற்காக இருவரைப் பொலிசார் கைதுசெய்தனர் | https://www.bbc.com/news/world-asia-46762770 |
| 3. | 23 ஜனவரி | முல்லைத்தீவு; கிளிநொச்சி | ஜனாதிபதியின் விஜயத்தை எதிர்த்த வேளை காணாமலாக்கப்பட்டோரின் குடும்பத்தினர் அச்சுறுத்தப்பட்டனர் | https://www.tamilguardian.com/content/families-disappeared-threatened-when-protesting-presidents-vanni-visit |
| 4. | 8 பெப்ரவரி | மன்னார் | இரவில் “சி.ஐ.டி. அலுவலர்கள்” பலாத்காரமாக வீட்டுக்குள் பிரவேசித்தனர் | https://www.tamilguardian.com/content/wife-disappeared-appeals-protection-after-threats |

| | | | | |
|---|---|---|---|---|
| 5. | 5 ஜனவரி | இரணைமடு | இரணைதீவுக்கு வருகை தந்த செயலார்வலர்கள் பிரவேசிப்பதற்கு இராணுவத்தினால் தடை | https://twitter.com/dharsha_J/status/1081774041793421312 |
| 6. | 8 ஜனவரி | இரணைமடு | செயலார்வலரும், ஊடகவியலாளர்கம் பிரவேசிப்பதை மறுப்பதற்கு கடற்படை முயற்சி | http://www.sundayobserver.lk/2019/01/13/news-features/iranaitivu-eight-months-after-reclaiming-land-navy<br><br>https://twitter.com/rukitweets/status/1082867524692144128 |
| 7. | 26 ஜனவரி | கேப்பாபுலவு | காணியை விடுவிக்குமாறு கோரிய கேப்பாபுலவு குடும்பங்களுக்கு போர்வீரர்கள் அச்சுறுத்தல் | https://www.tamilguardian.com/content/soldiers-intimidate-keppapulavu-families-demanding-release-land<br>https://www.vikalpa.org/?p=34307 |
| 8 | 6 பெப்ரவரி | கேப்பாபுலவு | கேப்பாபுலவிலிருந்து போராட்டக்காரர்களை வெளியேற்றுவதற்கான பொலிசாரின் முயற்சி நிராகரிக்கப்பட்டது. | https://www.tamilguardian.com/content/court-rejects-sri-lankan-police-attempts-throw-protesters-out-keppapulavu<br><br>https://twitter.com/vikalpavoices/status/1089389060513161222<br><br>https://twitter.com/vikalpavoices/status/1089149335848214528 |
| 9. | 9 பெப்ரவரி | கேப்பாபுலவு | இராணுவத்தின் அச்சுறுத்தலின் காரணமாக கூடாரங்களை மூடுவதற்கு கேப்பாபுலவு போராட்டக்காரர்கள் தள்ளப்பட்டனர் | https://www.tamilguardian.com/content/army-intimidation-forces-keppapulavu-protesters-cover-shacks |
| 10. | 27 பெப்ரவரி | கேப்பாபுலவு | புலம்பெயர்ந்த குடும்பங்களின் கையொப்ப இயக்கத்தைப் பொலிசார் தடுத்தனர் | https://www.tamilguardian.com/content/sri-lankan-police-obstruct-displaced-families-signature-campaign |
| 11. | 21 பெப்ரவரி | மன்னார்; சிலாவத்துறை | | https://www.tamilguardian.com/content/muslims-protest-sri-lanka-navy-occupation-mannar<br><br>https://www.tamilguardian.com/content/mannar-muslim-protesters-file-complaint-against-sri-lanka-navy-threats |

| ஆ. வடக்கில் தமிழ் இதழியலாளர்களுக்கு அச்சுறுத்தல்களும், தடைகளும் | | | | |
|---|---|---|---|---|
| 12. | 7 ஜனவரி | மன்னார் | ஊடகவியலாளர்கள் பொலிசாரினால் அச்சுறுத்தப்பட்டனர் | https://twitter.com/garikaalan/status/1082458727536459777<br><br>https://twitter.com/garikaalan/status/1082353227205464064<br><br>http://www.virakesari.lk/article/47675 |
| 13. | 19 ஜனவரி | முல்லைத்தீவு | புத்தரின் சிலையின் நிருமாண அமைவிடத்தில் அச்சுறுத்தலுக்கு ஊடகவியலாளர்கள் முகங்கொடுத்தனர் | https://www.tamilguardian.com/content/large-buddha-statue-built-mullaitivu-hindu-temple-site-despite-local-opposition<br><br>https://www.tamilguardian.com/content/tamil-journalists-face-intimidation-construction-buddha-statue-steps-mullaitivu |
| 14. | 23 ஜனவரி | முல்லைத்தீவு | புத்தர் சிலையின் திறப்பு விழாவில் ஊடகவியலாளர்கள் அச்சுறுத்தப்பட்டனர் | https://www.tamilguardian.com/content/tamil-journalists-face-intimidation-construction-buddha-statue-steps-mullaitivu<br><br>https://www.tamilguardian.com/content/more-tensions-opening-illegal-buddha-statue-mullaitivu-rushed-through |
| 15. | 10 பெப்ரவரி | முல்லைத்தீவு | முல்லைத்தீவில் நீர் வடியச்செய்தல் குறித்த போராட்டங்கள் தொடர்பாகச் செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளர்கள் இராணுவத்தினால்; அச்சுறுத்தப்பட்டனர் | http://www.jdslanka.org/index.php/news-features/media/852-army-threatens-journalist-covering-protest-against-water-theft-video<br><br>https://www.tamilguardian.com/content/army-threatens-journalist-mullaitivu |
| 16. | 12 பெப்ரவரி | மன்னார் | மன்னார் கூட்டத்தில் ஆளுனரின் பாதுகாப்பு அலுவலர்களினால் ஊடகவியலாளர்கள் அகற்றப்பட்டனர் | https://www.tamilguardian.com/content/northern-governor’s-security-remove-journalists-mannar-meeting |
| 17. | 19 பெப்ரவரி | யாழ்ப்பாணம் | கோப்பாய் பொலிஸ் பொறுப்பதிகாரியினால் ஊடகவியலாளர் தாக்கப்பட்டார் | https://www.tamilguardian.com/content/sri-lankan-police-assault-tamil-journalist-jaffna<br><br>http://www.sundaytimes.lk/article/1071848/fmm-condemns-police-attack-on-jaffna-journalist<br><br>https://www.thehindu.com/news/international/jaffna-journalist-assaulted-by-policeman/article26323437.ece<br><br>http://srilankabrief.org/2019/02/free-media-movement-condemns-police-attack-on-journalist-nadarajah-kugarajah |

| | | | | |
|---|---|---|---|---|
| 18. | 12 மார்ச் | முல்லைத்தீவு | ஊடகவியலாளரின் வீட்டில் கொள்ளையடிக்கப்பட்டது | https://www.tamilguardian.com/content/prominent-mullaitivu-journalists-equipment-burgled<br><br>https://twitter.com/kumanan93/status/1105543389708054529 |
| **இ. ஒன்றுகூடுவதற்கான சுதந்திரத்தின் மீறல்** | | | | |
| 19. | 4 பெப்ரவரி | திம்புல | தோட்டத் தொழிலாளர்களின் போராட்டத்துடன் இணைந்திருந்த இந்து மதகுருவின் வாகனம் மீது தாக்குதல் | https://lankacnews.com/වතු-කම්කරු-විරෝධයට-මැරයෝ/ |
| 20. | 23 பெப்ரவரி | பொகவந்தலாவ | தோட்டத் தொழிலாளர்களின் போராட்டத்தின் அமைப்பாளர்கள் கைது | http://www.sundayobserver.lk/2019/03/03/news/indian-funded-houses-handed-over-bogawantalawa<br>https://www.lankaviews.com/%E0%B6%B6%E0%B7%9C%E0%B6%9C%E0%B7%80%E0%B6%B1%E0%B7%8A%E0%B6%AD%E0%B6%BD%E0%B7%8F%E0%B7%80-%E0%B7%80%E0%B6%AD%E0%B7%94-%E0%B6%9A%E0%B6%B8%E0%B7%8A%E0%B6%9A%E0%B6%BB%E0%B7%94-%E0%B6%BB%E0%B7%90/ |
| 21. | 25 மார்ச் | அவிசாவளை | 1000 இயக்க விழிப்பியல் நிகழ்வு மீது தாக்குதல் | http://www.sripuvath.com/සාලාව-වතු-අධිකාරී-1000-ව්%E2%80%8Dයාපෘ/?fbclid=IwAR0dojPdEcHL1LgxVJLGLPJyhIksIvR4PGzo8a0gDB6JC-mpk32cMFJ6jow |
| 22. | 13 பெப்ரவரி | கொழும்பு | வேலையற்ற பட்டதாரிகளின் போராட்டத்தின் மீது தாக்குதல் | http://www.adaderana.lk/news/53224/police-fire-tear-gas-at-protesting-unemployed-graduates<br><br>https://www.newsfirst.lk/2019/02/13/tear-gas-used-to-disperse-unemployed-graduates-protest/<br><br>http://www.sundaytimes.lk/article/1070213/rajapaksa-condemns-usage-of-teargas-during-unemployed-undergraduates-protest |
| 23. | 21 பெப்ரவரி | கொழும்பு | பல்கலைக்கழக மாணவ போராட்டக்காரர்களைக் கலைப்பதற்கு கண்ணீர் புகைக்குண்டும், நீர் பீச்சியடித்தலும் பயன்படுத்தப்பட்டன | http://www.dailymirror.lk/breaking_news/Protesting-Uni--students-tear-gassed/108-162711<br><br>https://www.newsfirst.lk/2019/02/21/tear-gas-and-water-cannons-used-to-disperse-inter-university-protest |

| | | | | |
|---|---|---|---|---|
| 24. | 13 மார்ச் | கொழும்பு | மாணவர்களைக் கலைப்பதற்கு பொலிசாரினால் கண்ணீர் புகைக்குண்டு பயன்படுத்தப்பட்டது; ஐருளுகு கூட்ட அழைப்பாளர் கைது | http://www.colombopage.com/archive_19A/Mar13_1552501627CH.php |
| 25. | 28 பெப்ரவரி | கொழும்பு | ஆசிரியர்களின் போராட்டம் மீது தாக்குதல் | https://www.newsfirst.lk/2019/03/03/teachers-union-to-take-actions-against-teargas-attack/<br>http://www.dailymirror.lk/breaking_news/Two-injured-during-teachers’-protest:-Union-alleges-protesters-were-attacked-with-garbage/108-163083 |
| 26. | 18 மார்ச் | கொழும்பு | சுவர்ணவாஹினியில் புதிதாக அமைக்கப்பட்ட தொழிற்சங்கத்தின் உறுப்பினர்கள் வேலையிலிருந்து நீக்கப்பட்டனர் | https://twitter.com/AzzamAmeen/status/1107857491541409792 |
| 27. | 22 மார்ச் | புத்தளம் | போராட்டக்காரர்கள் மீது குண்டாந்தடித் தாக்குதல் | http://www.adaderana.lk/news/53935/police-baton-charge-protesters-in-puttalam<br><br>https://www.bbc.com/sinhala/sri-lanka-47667399 |
| | | | **ஈ. கருத்துச் சுதந்திரத்தின் மீறல்** | |
| 28. | 31 ஜனவரி | | “கோப்பி கடே” தொலைக்காட்சி நாடகத்தின் தொடர்பகுதி தடை செய்யப்பட்டது | https://twitter.com/kataclysmichaos/status/1091211698076147712 |
| 29. | 23 ஜனவரி | ஹம்பாந் தோட்டை | போராட்டத்தில் செய்தி சேகரிக்கச் சென்ற இதழியலாளர்கள் அச்சுறுத்தப்பட்டனர் | http://www.ada.lk/breaking_news/හම්බන්තොටමහලේවායේවිරෝධතාවක්වාර්තාකිරීමට-ගියමාධ්%E2%80%8Dයවේදීයාට-තර්ජන/11-344655<br><br>https://www.ifj.org/media-centre/news/detail/category/press-releases/article/sri-lankan-journalist-intimidated-covering-protest.html |
| 30. | 23 மார்ச் | குருநாகல் | பௌத்த சமயத்திற்கான சார்த்துரைக்கப்பட்ட அவதூறு குறித்து சிறு கதை எழுத்தாளர் விசாரிக்கப்பட்டார் | 23 மார்ச், ராவய |

| | | | | |
|---|---|---|---|---|
| **உ. மனித உரிமைகள் குறித்து ஜனாதிபதியின் விமர்சனம்** | | | | |
| 31. | 24 ஜனவரி | | மனித உரிமைகள் செயலார்வலர்களை ஜனாதிபதி தாக்கினார், சட்டத்திற்குப் புறம்பான கொலைகளுக்கான அங்கீகாரத்திற்கு சமிக்ஞை | https://www.colombotelegraph.com/index.php/sirisena-openly-attacks-human-rights-activists-signals-approval-for-extra-judicial-killings/<br><br>https://www.theguardian.com/world/2019/jan/18/example-to-the-world-sri-lanka-president-plans-to-copy-dutertes-war-on-drugs<br><br>http://www.colombopage.com/archive_19A/Jan16_1547651080CH.php |
| 32. | 13 மார்ச் | மாத்தறை | பாடசாலைகளில் ஒழுக்கத்தை மனித உரிமைகள் தடுப்பதாக ஜனாதிபதி வலியுறுத்துகிறார் | http://www.dailynews.lk/2019/03/14/local/180195/teachers-have-boundless-duty-create-disciplined-generation-president<br><br>https://www.tamilguardian.com/content/sri-lankan-president-claims-‘human-rights’-are-hindering-discipline-schools |
| 33. | 6 பெப்ரவரி | | அரசியலமைப்புப் பேரவையினதும், மனித உரிமைகள் ஆணைக்குழுவினதும் மீது ஜனாதிபதி தாக்குதல் | https://www.colombotelegraph.com/index.php/sirisena-hits-out-at-constitutional-council-again-questions-cc-decision-to-shoot-down-appointments-of-12-judges-also-attacks-human-rights-commission/ |
| **ஊ. சுதந்திரங்களுக்கான உத்தேசமான அச்சுறுத்தல்கள்** | | | | |
| 34. | 5 ஜனவரி | கொழும்பு | திரிபிட்டகவுக்கு சட்டபூர்வ அங்கீகாரம் வழங்கப்பட்டது | http://www.newindianexpress.com/world/2019/jan/03/buddhist-scriptures-tripitaka-to-be-declared-part-of-srilankan-heritage-on-january-5-1920196.html<br><br>http://www.ft.lk/news/Will-mediate-to-make-Tripitaka-World-Heritage--President/56-670315 |
| 35. | 21 மார்ச் | கொழும்பு | கண்காணிப்புச் சாதனங்களுக்கு அமைச்சரவையின் அங்கீகாரத்தை ஜனாதிபதி நாடினார் | https://www.colombotelegraph.com/index.php/sri-lankan-govt-to-spend-6-9-billion-rupees-for-interception-equipment-in-the-name-of-the-war-on-drugs/ |

### அ. வடக்கில் ஊக்கத்துடன் இயங்குதலுக்கு அச்சுறுத்தல்களும், தடைகளும்

வடக்கில் ஊக்கத்துடன் இயங்குதல் (நாட்டின் ஏனைய பகுதிகளுடன்) ஒப்பீட்டுரீதியில் சிறிதளவு ஆனால், கணிசமானளவும், நிலைத்திருக்கத்தக்கதுமான அடக்குமுறையைச் சந்தித்தது. கைது செய்யப்படுவார் என்ற அச்சுறுத்தல்கள், சி.ஐ.டி. என சார்த்துரைக்கின்ற நபர்கள் காணாமலாக்கப்பட்ட ஒருவரின் குடும்பத்தின் வீட்டுக்குள் பலாத்காரமாக பிரவேசித்தது அத்துடன் 25க்கு மேற்பட்ட வருடங்களுக்குப் பின்னர் தமது காணிக்கான அடைதலை அண்மையில் உள்ளூர்வாசிகள் மீள-ஈட்டிக் கொண்ட இரணைதீவுக்கு செல்வதிலிருந்து செயலார்வலர்களைத் தன்னிச்சையாக தடுப்பதற்கு கடற்படை முயற்சித்தது ஆகிய அமைப்பில் காணாமலாக்கப்பட்டோரின் குடும்பங்கள் தொந்தரவுக்கு முகங்கொடுத்தன. புறம்பான சம்பவங்களில், கேப்பாபுலவில் காணி உரிமைகள் குறித்த போராட்டங்கள் ஆயுதப்படைகளினால் கடுமையாகக் கண்காணிக்கப்பட்டதுடன், இதில் போராட்டக்காரர்களை அச்சுறுத்துவதற்காக தனிப்பட்ட தொலைபேசிகளும், உத்தியோகபூர்வ புகைப்படக் கருவிகளும் பயன்படுத்தப்பட்டன.

#### 1. போதைப் பொருள் செயற்பாடு குறித்து முறையிட்ட பின்னர் கிளிநொச்சி மாணவன் தாக்கப்பட்டான்

ஜனவரி 31 அன்று, அறியப்படாத நபர்களினால் தமிழ்ப் பாடசாலை மாணவன் ஒருவன் தாக்கப்பட்டு, பின்னர் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டான். சட்டவிரோதமான போதைப்பொருள் வர்த்தகம் மற்றும் அதை முறையிடுவதற்கான வழிகள் ஆகியன பற்றி விழிப்பியலை உயர்த்துவதற்கு தனது பாடசாலைக்கு பொலிசார் வந்த போது, தனது இருப்பிடத்தில் சட்டவிரோதச் செயற்பாடு பற்றி பொலிசாருக்கு முன்னதாக மாணவன் அறிவித்திருந்தான். இரு தனிப்பட்டவர்களைக் கைது செய்வதற்கு மாணவனின் தகவலைப் பொலிசார் பயன்படுத்தினர். அதைத் தொடர்ந்து, உள்ளூர் போதைப்பொருள் விநியோகஸ்தர்களினால் மாணவன் தொடர்ச்சியாக தொந்தரவு செய்யப்பட்டு, அச்சுறுத்தப்பட்டான்.[1] பொலிசாருக்கு மாணவன் இந்த அச்சுறுத்தல்கள் பற்றி முறைப்பாடு செய்த அதேவேளை, நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை.

#### 2. பதாகைக்கு இலஞ்சம் கொடுத்ததிற்காக இருவரைப் பொலிசார் கைதுசெய்தனர்

ஜனவரி 3 அன்று, போக்குவரத்துப் பொலிஸ் பதாகை ஒன்றுக்கு இலஞ்சம் கொடுப்பதாக பாசாங்கு செய்த 'வீடியோ| ஒன்றை முகநூலில் பதிவேற்றியமைக்காக இரு ஆண்களை வவுனியா பொலிசார் கைது செய்துள்ளதாக அறிக்கையிடப்பட்டுள்ளது. பொது ஆதனத்தைச் சேதமாக்கியதாகவும், பொலிசாரை இகழ்ந்ததாகவும் அத்துடன் பொலிசார் குறித்து மோசமான பொதுசனப் பிரதிமையை உருவாக்கியதாகவும் அவர்கள் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தனர்.[2] அவர்கள் பின்னர் பிணை மீது விடுவிக்கப்பட்டனர்.

---

[1] https://www.tamilguardian.com/content/kilinochchi-school-student-attacked-after-reporting-local-drug-activity (கடைசியாக ஏப்ரல் 12 அன்று அடையப்பட்டது)

[2] https://www.bbc.com/news/world-asia-46762770 (கடைசியாக ஏப்ரல் 12 அன்று அடையப்பட்டது)



*பொலிசாருக்கு இலஞ்சமொன்றை வழங்குவதாக ஆண் ஒருவர் பாசாங்கு செய்யும் 'வீடியோ'விலிருந்த காட்சி - புகைப்பட அனுசரணை - BBC*

### 3. ஜனாதிபதியின் விஜயத்தை எதிர்த்த வேளை காணாமலாக்கப்பட்டோரின் குடும்பத்தினர் அச்சுறுத்தப்பட்டனர்

ஜனவரி 3 அன்று, முல்லைத்தீவுக்கு ஜனாதிபதி சிறிசேனவின் விஜயத்தை எதிர்ப்பதற்கு காணாமலாக்கப்பட்டோரின் குடும்பத்தினர் ஒன்றுகூடிய வேளையில், புலனாய்வு அலுவலர்கள் என வலியுறுத்திய ஆண்கள் அவர்கள் தமது போராட்டத்தினைத் தொடர்ந்தால் கைது செய்யப்படுவார்கள் என அச்சுறுத்தினார்கள்.[3] மேலதிகமாக, சிவில் யுத்தத்தின் பலதரப்பட்ட கட்டங்களிலும், அதன் பின்னரும் காணாமலாக்கப்பட்ட தமது அன்புக்குரியவர்களுக்கான நீதி தொடர்பில் சிறிசேன அரசாங்கத்தின் இன்னுமே நிறைவேற்றப்படாத வாக்குறுதிகள் தொடர்பில் மனக்குறைகளைக் கொண்டுள்ள குடும்பத்தினரைப் புலனாய்வு அலுவலர்களும், பாதுகாப்புப் படையினரும் அருகில் இருந்தவாறு புகைப்படமெடுத்தனர்.

கிளிநொச்சியில், ஜனாதிபதி விஜயம் செய்வதற்கு இருந்த இடத்திற்கு அருகில் போராட்டம் நடத்துவதிலிருந்து காணாமலாக்கப்பட்டோரின் தாய்மார்கள் நிறுத்தப்பட்டதாக அறிக்கையிடப்பட்டுள்ளது.

---

[3] https://www.tamilguardian.com/content/families-disappeared-threatened-when-protesting-presidents-vanni-visit (கடைசியாக ஏப்ரல் 12 அன்று அடையப்பட்டது)




*வன்னிக்கு ஜனாதிபதி சிறிசேனவின் விஜயம் குறித்து காணாமலாக்கப்பட்டோரின் அன்புக்குரியவர்கள் போராடுகின்றனர்  - புகைப்பட அனுசரணை* -Tamil Guardian

### 4. இரவில் “சி.ஐ.டி. அலுவலர்கள்” பலாத்காரமாக வீட்டுக்குள் பிரவேசித்தனர்

பெப்ரவரி 8 அன்று, தனது வீட்டுக்குள் பிரவேசித்த குற்றவியல் விசாரணைத் திணைக்கள (சி.ஐ.டி.) அலுவலர்கள் என வலியுறுத்திய நபர்களினால் அச்சுறுத்தப்பட்டதாக சார்த்துரைக்கப்பட்ட பின்னர், பாதுகாப்பு அளிக்குமாறு பலாத்காரமாக காணாமலாக்கப்பட்ட தமிழ் ஆண் ஒருவரின் மனைவி வேண்டுகோள் விடுத்துள்ளார். அந்த இடத்திற்கு தேவாலய மதகுரு ஒருவர் உட்பட அயலவர்கள் வந்த போது, போதைப் பொருள்களுக்காக வீட்டில் தேடுதல் நடத்துவதற்காக தாம் அங்கு வந்ததாக அத்துமீறியோரினால் சார்த்துரைக்கப்பட்டுள்ளது. எனினும், பொலிசாருக்கு அயலவர்கள் அறிவித்த போது, அத்துமீறியோர் அங்கிருந்து சென்றுவிட்டனர். இதற்குப் பதிலிறுப்பாக, மன்னாரில் உள்ள இலங்கையின் மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு முறைப்பாடொன்றை அந்தப் பெண் தாக்கல் செய்துள்ளார். அதில் தனது கணவரின் வழக்கு தொடருகின்ற அதேவேளை, தனது உயிரையும் அத்துடன் தனது பிள்ளைகளின் உயிரையும் குறித்து அச்சமடைவதாக அவர் தெரிவித்துள்ளார்.[4]

[4]https://www.tamilguardian.com/content/wife-disappeared-appeals-protection-after-threats (கடைசியாக ஏப்ரல் 12 அன்று அடையப்பட்டது)




தனது கணவரின் வழக்கு தொடரும் வேளையில், தனது உயிர் குறித்து ஆனந்தராஜா எட்னா டயஸ் அச்சமடைகின்றார் - *புகைப்பட அனுசரணை - Tamil Guardian*

## 5. இரணைதீவுக்கு வருகைதந்த செயலார்வலருக்கு பிரவேசிப்பதற்கு இராணுவத்தினால் தடை

சகபாடி ஒருவருடன் இரணைதீவுக்கு படகொன்றில் ஏறுவதிலிருந்து இலங்கையின் கடற்படையினால் தாம் தடுக்கப்பட்டதாக இலங்கைக்குச் செல்லுபடியான வதிவிட அனுமதிச் சீட்டொன்றுடனான கனடிய தமிழ் செயலார்வலர் ஒருவர் இணையத்தில் பதிவேற்றியிருந்தார்.[5] இரணைதீவு சமூகத்தினதும் அத்துடன் கடற்படை ஆக்கிரமித்துள்ள காணிக்கான அவர்களது முன்னைய போராட்டங்களினதும் ஆதரவாளர் ஒருவரான செயலார்வலர் தனது இணையதளப் பதிவேற்றத்தில் உள்@ர் மீனவர்களின் கூற்றுப்படி இந்த விதத்தில் சோதனை செய்வது தமிழ் தனிப்பட்டவர்களுக்கும், பெண்களுக்கும் ஈடில்லாவிதத்தில் பிரயோகிக்கப்படுவதாகக் குறிப்பிட்டிருந்தார்.

[5] https://twitter.com/dharsha_J/status/1081774041793421312 (கடைசியாக ஜனவரி 12 அன்று அடையப்பட்டது)

### 6. இரணைதீவுக்கு செயலார்வலரும், இதழியலார்களும் பிரவேசிப்பதை மறுப்பதற்கு கடற்படை முயற்சி

ஜனவரி 8 அன்று, இரணைதீவுக்கு வருகைதருவதற்கு உரிமைகள் செயலார்வலர் ரூகி பெர்ணான்டோவையும் மற்றும் பீ.பீ.சி.இலிருந்து இதழியலாளர்கள் உட்பட குழாமையும் நிறுத்துவதற்கு கடற்படை முயற்சித்தது.[6] மனித உரிமைகள் ஆணைக்குழு தலையிட்டு, தீவகத்திற்கு வருகை தருவதற்கு யாரேனும் ஒருவருக்கும் சட்டபூர்வ கட்டுப்பாடுகள் இல்லை என கடற்படையின் வட மத்திய தளபதியிடமிருந்து உறுதிமொழியொன்று பெறப்பட்ட போது, தாமதமொன்றின் பின்னர் மட்டுமே தொடர்ந்தும் செல்வதற்கு அவர்கள் அனுமதிக்கப்பட்டனர்.[7] அத்தகைய சட்டபூர்வ கட்டுப்பாடுகள் நிலவவில்லை என்ற போதிலும், இரணைதீவுக்காக செயலார்வலர்களுக்கும், இதழியலாளர்களுக்கும் அத்துடன் மனிதாபிமான உதவிக்கும் கூட கிரமமாகவும், தன்னிச்சையாகவும் பிரவேசம் மறுக்கப்படுவதாகச் சார்த்துரைக்கப்படுகின்றது.

### 7. காணியை விடுவிக்குமாறு கோரிய கேப்பாபுலவு குடும்பங்களுக்கு போர்வீரர்கள் அச்சுறுத்தல்



முகாமின் உள்ளே இருந்தபடியே போராட்டம் நடத்தும் குடும்பங்களை இராணுவ ஆளணியினர் கண்காணிப்பது தெரிகின்றது - *புகைப்பட அனுசரணை - Tamil Guardian*

[6] https://twitter.com/rukitweets/status/1082867524692144128 (கடைசியாக ஏப்ரல் 12 அன்று அடையப்பட்டது)

[7] http://www.sundayobserver.lk/2019/01/13/news-features/iranaitivu-eight-months-after-reclaiming-land-navy (கடைசியாக ஏப்ரல் 12 அன்று அடையப்பட்டது)

ஜனவரி 26 அன்று, இராணுவ முகாமொன்று தற்போது அமைந்துள்ள கேப்பாபுலவில், தமது காணியை விடுவிக்குமாறு கோரி இடம்பெயர்ந்த குடும்பங்களின் நடந்துகொண்டிருக்கும் அமைதியான போராட்டத்தின் அங்கமாக, தமது காணியை மீளளிப்பதற்கு குறித்துரைக்கப்பட்டுள்ள காலக்கெடுவொன்று கடந்ததைத் தொடர்ந்து, முகாமிற்கு அடுத்ததாக தமது போராட்டத்தைக் குடும்பங்கள் நகர்த்தின. முகாமில் இருந்தபடியே போராட்டம் நடத்துகின்ற குடும்பங்களைப் புகைப்படமெடுப்பதன் மூலம், முகாமில் இருந்த பாதுகாப்புப் படையினர் பதிலிறுத்ததுடன், பொலிசாரையும், இராணுவ ஆளணியினரரையும் கடமைக்கு அமர்த்தியதன் மூலம், அமைவிடத்தில் பாதுகாப்பினையும், கண்காணிப்பினையும் அதிகரித்தனர்.[8, 9]

### 8. கேப்பாபுலவிலிருந்து போராட்டக்காரர்களை வெளியேற்றுவதற்கான பொலிசாரின் முயற்சி நிராகரிக்கப்பட்டது

பெப்ரவரி 6 அன்று, கேப்பாபுலவில் இராணுவம் குடியிருக்கின்ற கிராமத்திற்கு அருகில் போராட்டம் நடத்துவதிலிருந்து தமிழ் போராட்டக்காரர்களைத் தடை செய்வதற்கு இலங்கையின் பொலிசாரினாலான விண்ணப்பமொன்றை முல்லைத்தீவு நீதிமன்றம் நிராகரித்தது.[10,11] தமது காணியைக் கோரி குடும்பங்களின் அமைதியான போராட்டத்தை நிறுத்துமாறு பொலிசார் மீண்டும் மீண்டும் நீதிமன்றத்திற்கு விண்ணப்பித்திருந்தனர். இது நீதிமன்றத்தினால் உத்தரவிட்டவாறு முகாமிலிருந்து 75 மீட்டர் தூரத்தில் போராட்டம் நடைபெறுவதனால், போர் வீரர்களுக்கு போராட்டம் கண்கூடாகத் தெரிகின்றது அத்துடன் இது கோபத்திற்கு அவர்கைளத் தூண்டக்கூடும் என்பதே பொலிசாரின் பிந்திய வலியுறுத்தலாகும் (இது நிராகரிக்கப்பட்டது).[12]

### 9. இராணுவத்தின் அச்சுறுத்தலின் காரணமாக கூடாரங்களை மூடுவதற்கு கேப்பாபுலவு போராட்டக்காரர்கள் தள்ளப்பட்டனர்

பெண்களை அதிகளவாகக் கொண்ட போராட்டம் நடத்தும் குடும்பங்களைத் தொடர்ந்துமே கண்காணிக்கும் அமைப்பில் இராணுவ அச்சுறுத்தலைத் தொடர்ந்து தமது தற்காலிக கூடாரங்களை மூடுவதற்கு அவர்களை நிர்ப்பந்தித்துள்ளது. முகாமின் முன்புற புகுவழியில் பாதுகாப்புப் படைகளினால் 360 பாகை சுழலும் பாதுகாப்பு புகைப்படக் கருவியொன்று நிறுவப்பட்டுள்ளதாகவும், இது போராட்டம் நடத்தும் பகுதியைப் பதிவு செய்ய முடியும் எனவும் பெப்ரவரி 9 அன்று Tamil Guardian அறிக்கையிட்டிருந்தது.[13]

---

[8] https://www.tamilguardian.com/content/soldiers-intimidate-keppapulavu-families-demanding-release-land (கடைசியாக ஏப்ரல் 12 அன்று அடையப்பட்டது)

[9] https://www.vikalpa.org/?p=34307 (கடைசியாக ஏப்ரல் 12 அன்று அடையப்பட்டது)

[10] https://www.tamilguardian.com/content/court-rejects-sri-lankan-police-attempts-throw-protesters-out-keppapulavu

[11] https://twitter.com/vikalpavoices/status/1089389060513161222

[12] https://twitter.com/vikalpavoices/status/1089149335848214528

[13] https://www.tamilguardian.com/content/army-intimidation-forces-keppapulavu-protesters-cover-shacks




கேப்பாபுலவில் தமது மூடப்பட்ட தற்காலிக கூடாரங்களில் பெண்கள் - *புகைப்பட அனுசரணை* -Tamil Guardian

## 10. புலம்பெயர்ந்த குடும்பங்களின் கையொப்ப இயக்கத்தைப் பொலிசார் தடுத்தனர்




*இடது: போராட்டம் நடத்தும் பெண்ணுக்கு பொலிஸ் அலுவலர் அறிவுரை வழங்குவதாகத் தோன்றுகிறது*
*- புகைப்பட அனுசரணை* -Tamil Guardian; *வலது:* Tweet courtesy-@garikaalan

பெப்ரவரி 27 அன்று, தமது காணியை மீளளிக்குமாறு கோரி இடம்பெயர்ந்த குடும்பங்களின் நடந்து கொண்டிருக்கும் போராட்டத்தின் முயற்சிகளின் ஓர் அங்கமாக, முல்லைத்தீவு, கேப்பாபுலவில் கையொப்ப இயக்கமொன்றை ஆரம்பித்த இடம்பெயர்ந்த குடும்பங்கள் இலங்கையின் பொலிஸ் அலுவலர்களினாலும், புலனாய்வு ஆளணியினராலும் அச்சுறுத்தப்பட்டதாக அறிக்கை இடப்பட்டுள்ளது.[14] அதிகளவு பெண்களைக் கொண்ட போராட்டக்காரர்கள் புகைப்படம் எடுக்கப்பட்டு, போராட்டத்தை நிறுத்துமாறு எச்சரிக்கப்பட்டனர்.

---

[14] https://www.tamilguardian.com/content/sri-lankan-police-obstruct-displaced-families-signature-campaign (கடைசியாக ஏப்ரல் 12 அன்று அடையப்பட்டது)

### 11. போராட்டக்காரர்களை கடற்படை புகைப்படமெடுத்தது

பெப்ரவரி 21 அன்று, சிலாவத்துறையில் இராணுவம் குடியிருந்த 35 ஏக்கர்களைக் கொண்ட காணியை விடுவிப்பதற்காக போராட்டம் நடத்திய இடம்பெயர்ந்த முஸ்லிம்கள், கடற்படையினால் புகைப்படமெடுக்கப்பட்டதாகவும், கண்காணிக்கப்பட்டதாகவும் அறிக்கையிடப்பட்டுள்ளது.[15] பெப்ரவரி 23 அன்று, அச்சுறுத்தலினதும், கண்காணிப்பினதும் வலியுறுத்தல்களைக் குறிப்பிட்டு, மனித உரிமைகள் ஆணைக்குழுவில், இலங்கையின் கடற்படைக்கு எதிராக முறைப்பாடு ஒன்றைப் போராட்டக்காரர்கள் தாக்கல் செய்துள்ளனர். எனினும், தமது காணிக்கான போராட்டத்தை தொடரவுள்ளதாக அவர்கள் சபதமெடுத்துள்ளனர்.[16]



பொலிசார் பார்த்துக்கொண்டிருக்கையில் போராட்டக்காரர்களை இலங்கைக் கடற்படையினர் புகைப்படமெடுக்கின்றது - *புகைப்பட அனுசரணை -Tamil Guardian*

### ஆ. வடக்கில் தமிழ் இதழியலாளர்களுக்கு அச்சுறுத்தல்களும், தடைகளும்

வடக்கில் ஆயுதப்படைகளினதும், பொலிசாரினதும் தலையீட்டினால் தமிழ் இதழியலாளர்களின் பணி பரவலாக தடுக்கப்பட்டது. ஓர் இதழியலாளர் உடல்ரீதியாகத் தாக்கப்பட்ட அதேவேளை, ஏனையோர் அச்சுறுத்தப்பட்டு, பயமுறுத்தப்பட்டனர். பௌத்த சிலையொன்றின் கட்டிடம் முடிவடைந்துள்ளதுடன், இது இந்து ஆலய வளவில் கட்டப்பட்டுள்ளதாக உள்ளூர்வாசிகள்

---

[15] https://www.tamilguardian.com/content/muslims-protest-sri-lanka-navy-occupation-mannar (கடைசியாக ஏப்ரல் 12 அன்று அடையப்பட்டது)

[16] https://www.tamilguardian.com/content/mannar-muslim-protesters-file-complaint-against-sri-lanka-navy-threats (கடைசியாக ஏப்ரல் 12 அன்று அடையப்பட்டது)

வலியுறுத்துகின்றனர். கட்டிட அமைவிடத்திலும், சிலையின் திறப்பு விழாவிலும் அச்சுறுத்தலுக்கும், விரோதத்தன்மைக்கும் தமிழ் இதழியலாளர்கள் முறையே கட்டிடக்காரர்களினாலும், மதகுருமார்களினாலும் முகங்கொடுத்தனர்.

## 12. இதழியலாளர்கள் பொலிசாரினால் அச்சுறுத்தப்பட்டனர்

ஜனவரி 7 அன்று, அனாதைகளுக்காக என வலியுறுத்தி இரு மன்னார் கிராமங்களில் மக்களிடமிருந்து பணத்தைச் சேகரித்த அனுராதபுரத்தைச் சேர்ந்த இரு இளைஞர்கள் மடக்கிப் பிடிக்கப்பட்டு, அவர்களைச் சந்தேகநபர்கள் எனக் கருதிய உள்ளூர் கிராமவாசிகளால் பொலிசாரிடம் கையளிக்கப்பட்டதாக அறிக்கையிடப்பட்டுள்ளது.[17] பொலிசாருக்கு அறிவித்தவர்களைப் பொலிசார் அச்சுறுத்தியதாகவும், சார்த்துரைக்கப்பட்ட குற்றமிழைத்தவர்களைப் பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு சென்றதாகவும் உள்ளூர்வாசிகள் சார்த்துரைக்கின்றனர்.[18] சம்பவம் நடந்த இடத்திற்குச் சென்ற உள்ளூர் தமிழ் இதழியலாளர் ஒருவர் பொலிசாரினால் அச்சுறுத்தப்பட்டதாகவும், அவரது விபரங்களையும், புகைப்படத்தையும் பொலிசார் எடுத்ததாகவும் சார்த்துரைக்கப்படுகின்றது. பொலிசாருடனும், மனித உரிமைகள் ஆணைக்குழுவுடனும் முறைப்பாடொன்றை இதழியலாளர் தாக்கல்செய்துள்ளதாக அறிக்கையிடப்பட்டுள்ளது.[19]

## 13. புத்தரின் சிலையின் நிருமாண அமைவிடத்தில் அச்சுறுத்தலுக்கு இதழியலாளர்கள் முகங்கொடுத்தனர்

முல்லைத்தீவில், புத்தரின் சிலை மீதான தமது நிருமாணப் பணியை சிங்களக் கட்டிடக்காரர்கள் அதிகரித்து வருவதாகத் தெரிகின்றது, இந்து ஆலயமொன்றுக்குச் சொந்தமானது எனச் சொல்லப்படும் காணி மீது கூடாரமொன்றை அமைத்த பௌத்த பிக்கு ஒருவரின் ஆரம்ப நடவடிக்கையுடன் கட்டுமானம் ஆரம்பித்தது.[20] ஜனவரி 19 அன்று, நிகழ்ச்சிகளை ஆவணப்படுத்துவதற்கு நிருமாண அமைவிடத்தில் இருந்த இதழியலாளர்களை அச்சுறுத்தும் சார்த்துரைக்கப்பட்டுS;S முயற்சியொன்றில் சிங்கள நிருமாணத் தொழிலாளர்களினால் நடமாடும் தொலைபேசிகள் மூலம் அவர்கள் புகைப்படமெடுக்கப்பட்டனர்.[21]

[17] https://twitter.com/garikaalan/status/1082458727536459777 (கடைசியாக ஏப்ரல் 12 அன்று அடையப்பட்டது)

[18] https://twitter.com/garikaalan/status/1082353227205464064 (கடைசியாக ஏப்ரல் 12 அன்று அடையப்பட்டது)

[19] http://www.virakesari.lk/article/47675 (கடைசியாக ஏப்ரல் 12 அன்று அடையப்பட்டது)

[20] https://www.tamilguardian.com/content/large-buddha-statue-built-mullaitivu-hindu-temple-site-despite-local-opposition (கடைசியாக ஏப்ரல் 13 அன்று அடையப்பட்டது)

[21] https://www.tamilguardian.com/content/tamil-journalists-face-intimidation-construction-buddha-statue-steps-mullaitivu (கடைசியாக ஏப்ரல் 13 அன்று அடையப்பட்டது)



*கட்டிட அமைவிடத்தில் உள்ள இதழியலாளர்களை நிருமாணத் தொழிலாளர்கள் புகைப்படமெடுக்கின்றனர்.*
*- புகைப்பட அனுசரணை -Tamil Guardian*

### 14. புத்தரின் சிலையின் திறப்பு விழாவில் இதழியலாளர்கள் அச்சுறுத்தப்பட்டனர்

புத்தரின் சிலை கட்டப்படுகின்ற வாதாடப்படுகின்ற காணியின் விடயம் மீது வடக்கு, கிழக்கு மாகாணங்கள் அபிவிருத்தி: ஜனாதிபதி செயலணியினாலான கடிதமொன்றில்[22] ஜனாதிபதியின் அன்பான ஒத்துழைப்பும், உடனடியிலான தலையீடும் கோரப்பட்ட போதிலும், பொலிஸ் பிரசன்னமொன்றுடனும், அரசாங்க தொல்பொருள் ஆராய்ச்சித் திணைக்களத்தின் ஆதரவுடனும் சிலை அவசரம் அவசரமாக அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.[23] நிகழ்ச்சியில் மதகுருமார்கள் உட்பட கலந்துகொண்ட சிங்களவர்களினால் தமிழ் இதழியலாளர்கள் தொந்தரவு செய்யப்பட்டதாகவும், சிலை தொடர்பில் எவ்வாறு தகவல் தமிழ் சமூகத்தில் பரவுவதாக கேட்கப்பட்டதாகவும் அறிக்கையிடப்பட்டுள்ளது. வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் ரி.ரவிகரனும் தொந்தரவு செய்யப்பட்டார். இடப்பரப்பு மீது கட்டுவதற்கு அவசியமான அனுமதி கோரப்படவில்லை அல்லது பெறப்படவில்லை, அவ்வாறாக கட்டிடமானது சட்டவிரோதமானது

[22] https://www.tamilguardian.com/content/tamil-journalists-face-intimidation-construction-buddha-statue-steps-mullaitivu (கடைசியாக ஏப்ரல் 13 அன்று அடையப்பட்டது)

[23] https://www.tamilguardian.com/content/more-tensions-opening-illegal-buddha-statue-mullaitivu-rushed-through (கடைசியாக ஏப்ரல் 13 அன்று அடையப்பட்டது)

என்பது குறித்து தொடர்பான பிரிவுசார் சபைக்கு தகவலுக்கான உரிமையொன்றுக்கான வேண்டுகோள் விடுக்கப்பட்டதாக ஜனவரி 24ஆம் திகதி உறுதிப்படுத்தப்பட்ட நிலையில் 23ஆம் திகதியன்று அங்குரார்ப்பணத்திற்கு மதகுருமார்கள் விரைந்துள்ளதாக எண்ணப்படுகின்றது.[24]



*பிரதிமை - புத்தரின் சிலையொன்று அங்குரார்ப்பணம் செய்யப்பட்ட நீராவி பிள்ளையார் கோவிலின் வாதாடப்படுகின்ற காணியில் பௌத்த மதகுருமார்களுடன் தமிழ் இதழியலாளர்கள் வாதhடுகின்றனர் – புகைப்பட அனுசரணை -Tamil Guardian*

## 15. முல்லைத்தீவில நீரை வடியச்செய்தல் குறித்த போராட்டங்கள் தொடர்பாகச் செய்தி சேகரிக்கச் சென்ற இதழியலாளர்கள் இராணுவத்தினால் அச்சுறுத்தப்பட்டனர்

பெப்ரவரி 10 அன்று, இராணுவத்தின் சார்த்துரைக்கப்படுகின்ற நீரை வடியச்செய்தல் மீது தமிழ் உள்ளூர்வாசிகளின் போராட்டம் குறித்து செய்தி சேகரிக்கச் சென்ற இதழியலாளர் ஒருவர் அச்சுறுத்தப்பட்டதாக அறிக்கையிடப்பட்டுள்ளது. இடப்பரப்பிலிருந்து வெளியேறுவதற்கு அவர் தவறினால், “பயங்கரமான பின்விளைவுகளுக்கு” அவர் முகங்கொடுக்க வேண்டிவரும் என செல்வராஜா சுமந்திரன் என்ற சுதந்திரமாக இயங்கும் இதழியலாளருக்கு கூறப்பட்டதாகச் சார்த்துரைக்கப்படுகின்றது.[25] முல்லைத்தீவில், கடல்பற்றுவில் உள்ள குழாய்க் கிணறு ஒன்றிலிருந்து நீரின் மிதமிஞ்சிய உபயோகத்தினால் நீரை இராணுவத்தினர் வடியச்செய்வதாக சொல்லப்படுகிறது.

---

[24] http://www.virakesari.lk/article/48579 (கடைசியாக ஏப்ரல் 13 அன்று அடையப்பட்டது)

[25] http://www.jdslanka.org/index.php/news-features/media/852-army-threatens-journalist-covering-protest-against-water-theft-video (கடைசியாக ஏப்ரல் 13 அன்று அடையப்பட்டது)

கிணறு உள்ள காணி பாரம்பரியமாக தமிழருக்குச் சொந்தமானது என்பதுடன், இது உள்@ர்வாசிகளினால் போராட்டத்திற்கு இட்டுச்சென்றுள்ளது.[26]



*மிதமிஞ்சிய நீர் உபயோகம் குறித்த செய்தி சேகரிக்கச் சென்ற இதழியலாளர்களுடன் இராணுவ அலுவலர் எதிர்ப்பினைத் தெரிவிக்கின்றார் - புகைப்பட அனுசரணை - JDS Lanka*

### 16. மன்னார் கூட்டத்தில் ஆளுனரின் பாதுகாப்பு அலுவலர்களினால் இதழியலாளர்கள் அகற்றப்பட்டனர்

பெப்ரவரி 12 அன்று, மன்னார் மாவட்டச் செயலகத்தில் மன்னாரில் ஆளுனர் சுரேன் ராகவன் பங்குபற்றிய மாவட்ட மட்டக் கூட்டமொன்றில், ஆளுனரின் பாதுகாப்பு அலுவலர்களினால் உள்@ர் இதழியலாளர்கள் வெளியேற்றப்பட்டதாக அறிக்கையிடப்பட்டுள்ளது. தமது அச்சகச் சுதந்திரங்களுக்கு அச்சுறுத்தலொன்று என்றும், உள்@ராட்சி தீர்மானமெடுத்தலில் ஒளிவுமறைவின்மையைத் தடுப்பதற்கு முயற்சியொன்று என்றும் வெளியேறுமாறு நிர்ப்பந்திக்கப்பட்ட இதழியலாளர்கள் நிந்தித்தனர்.[27]

### 17. கோப்பாய் பொலிஸ் பொறுப்பதிகாரியினால் இதழியலாளர் தாக்கப்பட்டார்

பெப்ரவரி 19 அன்று, அறிக்கையிடப்பட்ட பெற்றோல் குண்டு வெடிப்புச் சம்பவம் குறித்து செய்தி சேகரிக்கச் சென்ற வேளை, பொலிசாரினால் இதழியலாளர் நடராஜா குகராஜா தாக்கப்பட்டதுடன், இதனால் காயங்களுடன் அவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.[28] வெடிப்பு இடம்பெற்ற

---

[26] https://www.tamilguardian.com/content/army-threatens-journalist-mullaitivu (கடைசியாக ஏப்ரல் 13 அன்று அடையப்பட்டது)

[27] https://www.tamilguardian.com/content/northern-governor’s-security-remove-journalists-mannar-meeting (கடைசியாக ஏப்ரல் 13 அன்று அடையப்பட்டது)

[28] https://www.tamilguardian.com/content/sri-lankan-police-assault-tamil-journalist-jaffna (கடைசியாக ஏப்ரல் 13 அன்று அடையப்பட்டது)

இடத்தில், பெருமளவு வாகனங்கள் தீப்பற்றிக் கொண்டதுடன், குற்றம் நடந்த இடத்தில் தொந்தரவை ஏற்படுத்தாமல் தனது படமெடுத்தல் கருவியை குகராஜா நிறுவியிருந்தார். எனினும், சம்பவத்தைப் படமாக்கக்கூடாது என அவர் அச்சுறுத்தப்பட்ட பின்னர், அவரது புகைப்படக் கருவி தூக்கி வீசப்பட்டதுடன், சிவில் உடைகளில் இருந்த கோப்பாய் பொலிஸ் நிலையத்தின்[29] பதில் பொறுப்பதிகாரி அவரது முகத்தில் குத்தினார்.[30] தாக்குதலை சுதந்திர ஊடக இயக்கங்கள் கண்டித்ததுடன், பொறுப்பானவர்கள் குறித்து விசாரணை நடத்தப்பட்டு, அவர்கள் பொறுப்புக்குள்ளாக்கப்பட வேண்டும் என அழைப்புவிடுத்தது.[31]



*தாக்கப்பட்ட இதழியலாளர் நடராஜா குகராஜா - புகைப்பட அனுசரணை - Sri Lanka Brief*

## 18. இதழியலாளரின் வீட்டில் கொள்ளையடிக்கப்பட்டது

மார்ச் 12 அன்று, முல்லைத்தீவிலிருந்து நன்கு அறியப்பட்ட தமிழ் இதழியலாளர் ஒருவரின் வீட்டை உடைத்து, கொள்ளையடிக்கப்பட்டுள்ளது. இதில் இதழியலாளரின் ஒரு மடிக்கணனி மற்றும் இரு புகைப்படக்கருவிகள் ஆகியன உட்பட இதழியலாளரின் பணிச் சாதனங்கள்

---

[29] http://www.sundaytimes.lk/article/1071848/fmm-condemns-police-attack-on-jaffna-journalist (கடைசியாக ஏப்ரல் 13 அன்று அடையப்பட்டது)

[30] https://www.thehindu.com/news/international/jaffna-journalist-assaulted-by-policeman/article26323437.ece (கடைசியாக ஏப்ரல் 13 அன்று அடையப்பட்டது)

[31] http://srilankabrief.org/2019/02/free-media-movement-condemns-police-attack-on-journalist-nadarajah-kugarajah (கடைசியாக ஏப்ரல் 13 அன்று அடையப்பட்டது)

கொள்ளையடிக்கப்பட்டன. அவை பின்னர் பொலிசாரினால் மீளப்பெறப்பட்டன. முல்லைத்தீவில் இராணுவமயமாக்கலினதும் மற்றும் சிங்களமயமாக்கலினதும் பிரச்சனைகள் மீதும் அத்துடன் காணாமலாக்கப்பட்டோரின் குடும்பங்களின் இல்லங்கள் மீதும் கிரமமாக அறிக்கையிடும் இதழியலாளர் குமணன் தனது பணியை அமைதியாக்குவதற்கான வேண்டுமென்றேயான முயற்சியொன்றே கொள்ளைச் சம்பவம் என தான் நம்புவதாகத் தெரிவித்தார். அவர் தனது பணியை மேற்கொள்ளும் வேளையில், இலக்குபடுத்தப்பட்ட தொந்தரவுக்கு கிரமமாக முகங்கொடுத்துள்ளார்.[32,33]

### இ. ஒன்றுகூடுவதற்கான சுதந்திரத்தின் மீறல்

தேயிலைத் தோட்டத் தொழிலாளருக்கு ரூபா 1000 கொண்ட நாளாந்த குறைந்தபட்ச வேதனத்தை கோருகின்ற 1000 இயக்கத்தின் அமைப்பாளர்கள் பலதரப்பட்ட வடிவங்களைக் கொண்ட தொந்தரவுக்கும், தாக்குதல்களுக்கும் அத்துடன் கைது செய்யப்படுவதற்கும் கூட முகங்கொடுக்கின்றார்கள். கொழும்பில் பல்கலைக்கழக மாணவரின் போராட்டங்கள் கண்ணீர் புகைக்குண்டினாலும், நீர் பீச்சியடித்தலினாலும் பொலிசாரினால் கலைக்கப்பட்டன. இதேவாறு, புறம்பான சம்பவமொன்றில், போராட்டங்களின் போது போராட்டம் நடத்திய ஆசிரியர்கள் தாக்கப்பட்டனர். புத்தளத்தில், போராட்டக்காரர்கள் மூர்க்கத்தனமாக குண்டாந்தடிகளினால் தாக்கப்பட்ட அதேவேளை, கொழும்பில் தனியார் தொலைக்காட்சி நிலையமொன்று தொழிற்சங்கக் கூட்டமொன்றின் பங்கெடுத்ததிற்காக ஊழியர்களைப் பதவிநீக்கியது.

### 19. தோட்டத் தொழிலாளர்களின் போராட்டத்துடன் இணைந்திருந்த இந்து மதகுருவின் வாகனம் மீது தாக்குதல்

பெப்ரவரி 4 அன்று, ஹற்றன் தோட்டத் தொழிலாளரின் சத்தியாக்கிரகத்துடன் இணைந்திருந்த ஓர் இந்து மதகுருவான சிவஸ்ரீ வேலு சர்மாவுக்குச் சொந்தமான வாகனமொன்று அவரது வீட்டின் முன்னால் தரித்திருந்த வேளை, அறியப்படாத நபர்களினால் தாக்கப்பட்டுள்ளது. வாகனம் மோசமான விதத்தில் சேதமடைந்துள்ளது.[34] சம்பவம் குறித்து விசாரணையொன்றை திம்புல பொலிசார் ஆரம்பித்துள்ளதாகச் சொல்லப்படுகின்றது. இச் சம்பவம் பகுதியில் உள்ள அரசியல்வாதிகளின் வேலையாக இருக்கலாம் என மதகுரு நம்புகின்றார்.

### 20. தோட்டத் தொழிலாளர்களின் போராட்டத்தின் அமைப்பாளர்கள் கைது

பெப்ரவரி 23 அன்று, பொகவந்தலாவையில் மறு நாள் நடைபெறவிருந்த போராட்டங்கள் குறித்து விழிப்பியலை உயர்த்திய வேளை 1000 இயக்கத்தின் அமைப்பாளர்கள் கைது செய்யப்பட்டனர்.

[32] https://www.tamilguardian.com/content/prominent-mullaitivu-journalists-equipment-burgled (கடைசியாக ஏப்ரல் 13 அன்று அடையப்பட்டது)

[33] https://twitter.com/kumanan93/status/1105543389708054529 (கடைசியாக ஏப்ரல் 13 அன்று அடையப்பட்டது)

[34] https://lankacnews.com/වතු-කම්කරු-විරෝධයට-මැරයෝ/ (கடைசியாக ஏப்ரல் 13 அன்று அடையப்பட்டது)

வீடமைப்;புத் திட்டமொன்றை[35] அங்குரார்ப்பணம் செய்வதற்கு பிரதமர் ரணில் விக்ரமசிங்கவின் விஜயத்துடன் அவர்களது போராட்டம் சரியாக ஒத்திருந்ததுடன், இது சாத்தியமானதொரு இடைஞ்சலாகக் கருதப்பட்டது. போராட்டத்தை திசைதிருப்புவதற்கே கைதுகள் மேற்கொள்ளப்பட்டதாக எண்ணப்படுகின்றது. 1000 இயக்கமானது போராட்டத்தை மீள்அட்டவணைப்படுத்தியதாக பொலிசார் வற்புறுத்துகின்ற போதிலும், அதை அமைப்பாளர்கள் கடுமையாக மறுத்துரைத்தனர்.[36] எவ்வளவு நேரம் அமைப்பாளர்கள் பொலிசாரினால் தடுத்துவைக்கப்பட்டிருந்தார்கள் என்பது குறித்து அறிக்கையிடப்படவில்லை.



*போராட்டம் குறித்த விழிப்பியல் பொலிசாரினால் குழப்பப்பட்டது - புகைப்பட அனுசரணை - Lanka Views*

### 21. 1000 இயக்க விழிப்பியல் நிகழ்வு மீது தாக்குதல்

மார்ச் 25 அன்று, அவிசாவளை, சலாது தோட்டத்தில் நடைபெற்ற விழிப்பியல் நிகழ்ச்சியானது தோட்ட அத்தியட்சகரினால் தாக்கப்பட்டதாக சார்த்துரைக்கப்பட்டுள்ளது என ‘சிறிபுவத்| அறிக்கையிட்டிருந்தது, ‘ஒன்லைன்| செய்தி தளத்தில் ‘வீடியோ| ஒன்று குழப்பநிலையைக் காட்டியிருந்தது.[37]

---

[35] http://www.sundayobserver.lk/2019/03/03/news/indian-funded-houses-handed-over-bogawantalawa (கடைசியாக ஏப்ரல் 13 அன்று அடையப்பட்டது)

[36] https://www.lankaviews.com/%E0%B6%B6%E0%B7%9C%E0%B6%9C%E0%B7%80%E0%B6%B1%E0%B7%8A%E0%B6%AD%E0%B6%BD%E0%B7%8F%E0%B7%80-%E0%B7%80%E0%B6%AD%E0%B7%94-%E0%B6%9A%E0%B6%B8%E0%B7%8A%E0%B6%9A%E0%B6%BB%E0%B7%94-%E0%B6%BB%E0%B7%90/ (கடைசியாக ஏப்ரல் 13 அன்று அடையப்பட்டது)

[37] http://www.sripuvath.com/%E0%B7%83%E0%B7%8F%E0%B6%BD%E0%B7%8F%E0%B7%80%E0%B7%80%E0%B6%AD%E0%B7%94-%E0%B6%85%E0%B6%B0%E0%B7%92%E0%B6%9A%E0%B7%8F%E0%B6%BB%E0%B7%93-1000-

### 22. வேலையற்ற பட்டதாரிகளின் போராட்டத்தின் மீது தாக்குதல்

பெப்ரவரி 13 அன்று, கொழும்பில் லோட்டஸ் சுற்றுவளைவுக்கு அருகில் போராட்டம் நடத்திய வேலையற்ற பட்டதாரிகள் வீதியைத் தடுப்பதாக சார்த்துரைக்கப்பட்டதனால், கண்ணீர் புகைக்குண்டுடனும், நீர்பீச்சியடித்தலுடனும் அவர்கள் தாக்கப்பட்டதாக அறிக்கை இடப்பட்டுள்ளது.[38,39] வேலைகளை வழங்குவது அரசாங்கத்தின் கடமை என்றும், தாக்குதல் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றும் மறுநாள் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்~ தாக்குதலைக் கண்டித்துள்ளதாக அறிக்கையிடப்பட்டுள்ளது.[40]

### 23. பல்கலைக்கழக மாணவப் போராட்டக்காரர்களைக் கலைப்பதற்கு கண்ணீர் புகைக்குண்டும், நீர்பீச்சியடித்தலும் பயன்படுத்தப்பட்டன



*மாணவர் போராட்டமொன்றில் தடையரண்களுக்கு மேலாக பொலிசார் நீர்பீச்சியடிக்கின்றனர் - புகைப்பட அனுசரணை - Daily Mirror*[41]

பெப்ரவரி 21 அன்று, பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான மாணவர் சம்மேளனத்தினால் ஒழுங்குசெய்யப்பட்டிருந்த போராட்டமொன்றைக் கலைப்பதற்காகப் பொலிசார் கண்ணீர்

---

%E0%B7%80%E0%B7%8A%E2%80%8D%E0%B6%BA%E0%B7%8F%E0%B6%B4/?fbclid=IwAR0dojPdEcHL1LgxVJLGLPJyhIksIvR4PGzo8a0gDB6JC-mpk32cMFJ6jow (கடைசியாக ஏப்ரல் 13 அன்று அடையப்பட்டது)

[38] http://www.adaderana.lk/news/53224/police-fire-tear-gas-at-protesting-unemployed-graduates (கடைசியாக ஏப்ரல் 13அன்று அடையப்பட்டது)

[39] https://www.newsfirst.lk/2019/02/13/tear-gas-used-to-disperse-unemployed-graduates-protest/ (கடைசியாக ஏப்ரல் 13 அன்று அடையப்பட்டது)

[40] http://www.sundaytimes.lk/article/1070213/rajapaksa-condemns-usage-of-teargas-during-unemployed-undergraduates-protest (கடைசியாக ஏப்ரல் 13 அன்று அடையப்பட்டது)

[41] http://www.dailymirror.lk/breaking_news/Protesting-Uni--students-tear-gassed/108-162711 (கடைசியாக ஏப்ரல் 13 அன்று அடையப்பட்டது)

புகைக்குண்டினையும், நீர்பீச்சியடித்தலையும் பயன்படுத்தினர்.[42] தென் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் மாணவர்களின் விரிவுரையாளர்கள் இடைநிறுத்தப்பட்டதை நீக்குதல் உட்பட பெருமளவு கோரிக்கைகள் மீது பல்கலைக்கழக மாணவர்களின் போராட்டம் நோக்கினைக் கொண்டிருந்தது.

### 24. மாணவர்களைக் கலைப்பதற்கு பொலிசாரினால் கண்ணீர் புகைக்குண்டு பயன்படுத்தப்பட்டது; IUSF கூட்ட அழைப்பாளர் கைது

மார்ச் 13 அன்று, உத்தேசமான பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தையும் மற்றும் பயங்கரவாதச் சட்டத்தையும் நீக்குமாறு கோரி பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான மாணவர் சம்மேளனத்தின் மாணவர்களால் ஒழுங்குபடுத்தப்பட்ட போராட்டமொன்று மீது பொலிசார் கண்ணீர் புகைக்குண்டினை ஏவினார்கள். இதைத் தொடர்ந்து பொலிசாரின் கூற்றுப்படி பாராளுமன்ற வீதியில் போராட்டத்தின் போது, சார்த்துரைக்கப்பட்ட கட்டுக்கடங்காத நடத்தை மீது ஐருளுகுஇன் கூட்ட அழைப்பாளர் மஹீல் பண்டார தெஹிதெனிய கைது செய்யப்பட்டார்.[43] அவர் 18ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டு, பின்னர் விடுவிக்கப்பட்டார்.

### 25. ஆசிரியர்களின் போராட்டம் மீது தாக்குதல்



*ஆசிரியர்களின் போராட்டம் மீது நீர்பீச்சியடிக்கப்பட்டது - புகைப்பட அனுசரணை - Daily Mirror*[44]

பெப்ரவரி 28 அன்று, இலங்கை ஆசிரியர் சேவைகள் தொழிற்சங்கத்தினால் ஒழுங்குசெய்யப்பட்ட போராட்டமொன்று மீது கண்ணீர் புகைக்குண்டு ஏவப்பட்டதுடன், நீரும் பீச்சியடிக்கப்பட்டது.

---

[42] https://www.newsfirst.lk/2019/02/21/tear-gas-and-water-cannons-used-to-disperse-inter-university-protest (கடைசியாக ஏப்ரல் 13 அன்று அடையப்பட்டது)

[43] http://www.colombopage.com/archive_19A/Mar13_1552501627CH.php (கடைசியாக ஏப்ரல் 13 அன்று அடையப்பட்டது)

[44] http://www.dailymirror.lk/breaking_news/Two-injured-during-teachers%E2%80%99-protest:-Union-alleges-protesters-were-attacked-with-garbage/108-163083 (கடைசியாக ஏப்ரல் 1 அன்று அடையப்பட்டது)

கல்வி அமைச்சுக்கு எதிர்ப்புறமாக நடைபெற்ற சம்பவத்தையிட்டு விசாரணை நடத்துமாறு ஜனாதிபதி சிறிசேனவுக்கு வேண்டுகோள் ஒன்று விடுக்கப்படவுள்ளதாக மார்ச் 3 அன்று தொழிற்சங்கம் தெரிவித்தது.[45]

### 26. சுவர்ணவாஹினியில் புதிதாக அமைக்கப்பட்ட தொழிற்சங்கத்தின் உறுப்பினர்கள் வேலையிலிருந்து நீக்கப்பட்டனர்

தனியார் தொலைக்காட்சி நிலையமான சுவர்ணவாஹினியின் புதிதாக அமைக்கப்பட்ட தொழிற்சங்கத்தின் 15 உறுப்பினர்கள் மார்ச் 17 அன்று நடைபெற்ற தொழிற்சங்கத்தின் முதலாவது கூட்டத்தை நடத்திய பின்னர் மார்ச் 18 அன்று பதவி நீக்கப்பட்டனர். பெருமளவு தொலைக்காட்சி நிலையப் பணியாளர் பங்கெடுத்ததாக சார்த்துரைக்கப்படுகின்ற தொழிற்சங்க கூட்டமானது "நிறுவனத்தின் வழமையான செயற்பாடுகளுக்கு இடையூறை விளைவித்தது" என பதவிநீக்கக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.[46]

### 27. போராட்டக்காரர்கள் மீது குண்டாந்தடித் தாக்குதல்

புத்தளத்திற்கு விஜயம் செய்யவிருந்த ஜனாதிபதி சிறிசேனவுடன் சந்திப்பொன்றைக் கோரிய போராட்டக்காரர்கள் மீது கலகம் அடக்கும் பொலிசாரினால் குண்டாந்தடிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாகச் சார்த்துரைக்கப்படுகின்றது. புத்தளத்தில் சிவு மாவத்தையில் சம்பவம் இடம்பெற்றதுடன், இங்கு போராட்டக்காரர்கள் எதிர்ப்பு தெரிவிக்கின்ற உத்தேசமான காணி நிரவலொன்று தொடர்பில் ஜனாதிபதியுடன் கலந்துரையாடலொன்றை நாடுவதற்கு அவர்கள்; ஒன்றுகூடியிருந்தனர்.[47] பெண்களைப் பொலிசார் தாக்கியதாக சம்பவ இடத்தில் இருந்த போராட்டக்காரர் ஒருவர் சார்த்துரைத்துள்ளதாகவும், பெருமளவானோர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டதாகவும், அதேவேளை "புத்தளத்தில் உள்ள மிகப் பெரிய பிரச்சனை" பற்றி பேசுவதற்கே அவர்கள் அங்கு கூடியிருந்ததாகவும் சார்த்துரைத்தனர்.[48]

### ஈ. கருத்துச் சுதந்திரத்தின் மீறல்

கலைகள் மீது கட்டுப்பாட்டிலான செயற்பாடுகளில், அரசாங்கத் தொலைக்காட்சி வலைப்பின்னலான ஐ.டி.என்.இல் ஒளிபரப்பப்படுவதிலிருந்து "கோப்பி கடே" என்ற தொலைக்காட்சியின் தொடர்பகுதியொன்று தடுக்கப்பட்டது. புறம்பான சம்பவமொன்றில், பௌத்த மதகுருமார்களினால் முறையிட்ட பின்னர் பௌத்தத்தை இழிவுபடுத்தியதாகச் சார்த்துரைக்கப்பட்டமை மீது எழுத்தாளர் ஒருவர் விசாரிக்கப்பட்டார். பௌத்த மதக் குழுக்களினால்

---

[45] https://www.newsfirst.lk/2019/03/03/teachers-union-to-take-actions-against-teargas-attack (கடைசியாக ஏப்ரல் 13 அன்று அடையப்பட்டது)

[46] https://twitter.com/AzzamAmeen/status/1107857491541409792 (கடைசியாக ஏப்ரல் 13 அன்று அடையப்பட்டது)

[47] http://www.adaderana.lk/news/53935/police-baton-charge-protesters-in-puttalam (கடைசியாக ஏப்ரல் 13 அன்று அடையப்பட்டது)

[48] https://www.bbc.com/sinhala/sri-lanka-47667399 (கடைசியாக ஏப்ரல் 13 அன்று அடையப்பட்டது)

அங்கீகரிக்கப்படாத கலைநயத்திலான வெளிப்படுத்தலுக்கு அல்லது பொதுவான வெளிப்படுத்தலுக்கு பௌத்த மதத்தின் ஏதேனும் பொருள்விளக்கத்தை நோக்கி பௌத்த மதத்தின் சகிப்புத்தன்மையின் வளர்ச்சியுறும் காட்டிகளில் ஒன்றாக பின்னைய சம்பவம் விளங்குகின்றது. இன்னொரு சம்பவத்தில், ஹம்பாந்தோட்டையின் தெற்கு நகரத்தில் போராட்டமொன்றில் செய்தி சேகரிப்பதை நிறுத்துமாறு இதழியலாளர் ஒருவர் அச்சுறுத்தப்பட்டதுடன், அதை நிறுத்துமாறும் கோரப்பட்டார்.

### 28. "கோப்பி கடே" தொலைக்காட்சி நாடகத்தின் தொடர்பகுதி தடை செய்யப்பட்டது

ஜனவரி 31 அன்று, அரசாங்கத்தினால் நிருவகிக்கப்படும் ஐ.டி.என். தொலைக்காட்சி அலைவரிசையில் இலங்கையில் மிக நீண்ட காலமாக ஒளிபரப்பப்படும் |கோப்பி கடே|இன் 'கிராம சேவக பிஸ்ஸா| என்ற தலைப்பிலான தொடர்பகுதியொன்று ஒளிபரப்பப்படுவதிலிருந்து தடைசெய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.[49] வாள் ஒன்றை வீசுகின்ற மனநோயிலான கிராம சேவகர் ஒருவரைத் தொடர்பகுதி சித்தரிப்பதாகச் சொல்லப்படுகின்றது. இது அனேகமாக சில வேளைகளில் கிராம சேவகராக ஜனாதிபதி குறிப்பிடப்படுவதன் உண்மையின் காரணமாக இருக்கலாம் என INFORM நம்புகின்றது.

### 29. போராட்டம் குறித்து செய்தி சேகரிக்கச் சென்ற இதழியலாளர்கள் அச்சுறுத்தப்பட்டனர்

ஜனவரி 23 அன்று, ஹம்பாந்தோட்டையில் லங்கா சோல்ட்டின் இலங்கை பொதுஜன முன்னணியுடன் (ஸ்ரீ லங்கா பொது ஜனபெரமுன என்ற சிங்களப் பெயரினால் பொதுவாக அறியப்பட்ட) இணைந்துள்ள தொழிலாளர்களினாலான போராட்டமொன்றுக்கு செய்தி சேகரிக்கச் சென்ற இதழியலாளர் ராகுல் சமந்த ஹெட்டிஆரச்சி ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியின் (ஐ.தே.க.) உறுப்பினர்கள் எனக் கோரப்படும் குழுவொன்றினால் அச்சுறுத்தப்பட்டதாகவும், தடுத்து நிறுத்தப்பட்டதாகவும் அறியப்பட்டுள்ளது. போராட்டக்காரர்களுக்கும், ஐ.தே.கட்சி எனக் கோருகின்ற குழுவுக்கும் இடையில் வளர்;ச்சியுறுகின்ற மோதல் மீது அவர் அறிக்கையிட்ட போது, குழுவானது அவரை அச்சுறுத்தியதுடன், அறிக்கையிடுவதை நிறுத்துமாறும் கோரியிருந்தது.[50] சர்வதேச இதழியலாளர்கள் சம்மேளனமும், அதன் இணையான இலங்கை சுதந்திர ஊடக இயக்கமும் ஹெட்டிஆரச்சிக்கு எதிரான நடவடிக்கையைக் கடுமையாக விமர்சித்ததுடன், முழுமையானதும், உடனடியானதுமான விசாரணையொன்றையும் கோரின.[51] பொலிசாருடன் ஹெட்டிஆரச்சி முறைப்பாடொன்றைத் தாக்கல் செய்துள்ளார். ஆனால், அவ்வேளையில் "இதை ஒரு பெரிய பிரச்சனையாக்க வேண்டாம் என்பதுடன், இதை இலகுவாக எடுக்க வேண்டும்" என அவரிடம் பொலிசாரினால் கூறப்பட்டதாக அறிக்கையிடப்பட்டுள்ளது.

---

[49] https://twitter.com/kataclysmichaos/status/1091211698076147712 (கடைசியாக ஏப்ரல் 13 அன்று அடையப்பட்டது)

[50] http://www.ada.lk/breaking_news/හම්බන්තොටමහලේවායේවිරෝධතාවක්වාර්තාකිරීමට-ගිය-මාධ්%E2%80%8Dයවේදීයාට-තර්ජන/11-344655 (கடைசியாக ஏப்ரல் 13 அன்று அடையப்பட்டது)

[51] https://www.ifj.org/media-centre/news/detail/category/press-releases/article/sri-lankan-journalist-intimidated-covering-protest.html (கடைசியாக ஏப்ரல் 13 அன்று அடையப்பட்டது)

### 30. பௌத்த சமயத்திற்கான சார்த்துரைக்கப்பட்ட அவதூறு குறித்து சிறுகதை எழுத்தாளர் விசாரிக்கப்பட்டார்

முறைப்பாடொன்றை இருபது பௌத்த மதகுருமார்கள் தாக்கல் செய்த பின்னர் 'ஒன்லைன்| சிறுகதையொன்றை வெளியிட்ட சகித்த சத்குமாரவிடம் குருநாகல் மாவட்டச் செயலகத்தினால் அவரது வெளியீடு மீது கருத்துரைக்குமாறு அவர் கேட்கப்பட்டார். பௌத்த மதத்தை சிறுகதை இழிவுபடுத்துவதாக மார்ச் 23 அன்று ராவய செய்திப்பத்திரிகை அறிக்கையிட்டிருந்தது.[52] அவர் பின்னர் கைது செய்யப்பட்டார்.

### உ. மனித உரிமைகள் குறித்து ஜனாதிபதியின் விமர்சனம்

சட்டத்திற்குப் புறம்பான கொலைகளை ஏற்றுக்கொள்வதாக தோன்றிய அதேவேளை, மனித உரிமைகள் மீது ஒரு தொடரிலான வாய்மொழியிலான தாக்குதல்களை ஜனாதிபதி மேற்கொண்டார். மனித உரிமைகள் ஆணைக்குழு மற்றும் அரசியலமைப்புப் பேரவை போன்ற ஜனாதிபதி அதிகாரங்கள் மீது சுதந்திரமான சமநிலைவாத நியாயப் பொறிமுறைகளாகச் செயற்படுகின்ற இலங்கையின் சில நியதியாக்க நிறுவனங்களை அவர் பகிரங்கமாகக் கண்டித்தார். இன்னொரு உயர்ந்தளவில் பிரச்சனைக்குரிய நகர்வில், அண்மையில் உருவாக்கப்பட்ட காணாமல் போனோருக்கான அலுவலகத்தை அவர் தாக்கினார். பாரிய அளவிலான மனித உரிமைகள் மீறல்களை கையாள்வதற்கும் அத்துடன் நிறைவேற்று அதிகாரங்கள் மீது சமநிலைவாத நியாயப் பொறிமுறைகளாக செயற்படுவதற்கும் எதிர்பார்க்கப்படும் முக்கியமான நிறுவனங்களைக் குறைத்;து மதிப்பதாக இந்தக் கருத்துரைகள் விளங்குவதாக INFORM நம்புகின்றது.

### 31. மனித உரிமைகள் செயலார்வலர்களை ஜனாதிபதி தாக்கினார், சட்டத்திற்குப் புறம்பான கொலைகளுக்கான அங்கீகாரத்திற்கு சமிக்ஞை

சட்ட வினைப்படுத்தலைத் தடுப்பதாக மனித உரிமைகள் செயலார்வலர்களை ஜனாதிபதி வெளிப்படையாகத் தாக்கினார். "மனித உரிமைகள் செயலார்வலர்கள் போதிப்பதை நாம் பின்பற்றினால் நாடொன்று கட்டொழுங்குபடுத்தப்பட முடியாது. அதுவே விடயமென்றால், அரசாங்கம் மற்றும் சட்ட வினைப்படுத்தல் முறைமை ஆகியன உட்பட சகலவற்றையும் நாம் மனித உரிமைகள் செயலார்வலர்களுக்கு கையளித்துவிட்டு, எமது கைகளைக் கழுவவேண்டும்" என சிறிசேன தெரிவித்ததாக அறிக்கையிடப்பட்டுள்ளது.

"விசேடமாக, பாதாள உலகத்தைக் கையாளும் போது, சில நடவடிக்கைகளை பொலிசார் எடுக்க வேண்டும்" என சிறிசேன தெரிவித்தார். இது சட்டத்திற்குப் புறம்பான கொலைகளுடன் அவருக்கு ஒரு பிரச்சனை இல்லை என்பதை எடுத்துக்காட்டுகின்றது. போதைப் பொருட்கள் தொடர்பான

---

[52] ராவய, 23 மார்ச் 2019

பிரச்சனைகளை நாட்டிலிருந்து அகற்றுவதற்கு ஒரு தொடரிலான சட்டத்திற்குப் புறம்பான கொலைகளை பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி குட்டர்ரே மேற்கொண்டதாக சார்த்துரைக்கப்பட்ட நிலையில், பிலிப்பைன்ஸ_க்கான விஜயமொன்றின் பின்னர் அதை ஆதரிக்கின்ற ஒரு தீர்வாகவே இது தோன்றுகின்றது.[53] விஜயத்தின் போது, "உலகத்திற்கான ஓர் உதாரணம்" என பிலிப்பைன்ஸ் ஜனாதிபதியின் செயற்பாடுகளை சிறிசேன பிரகடனப்படுத்தியிருந்தார்.[54]




*பிலிப்பைன்ஸில் சிறிசேன மற்றும் குட்டர்ரே - புகைப்பட அனுசரணை - Colombo Page* [55]

### 32. பாடசாலைகளில் ஒழுக்கத்தை மனித உரிமைகள் தடுப்பதாக ஜனாதிபதி வலியுறுத்துகிறார்

மார்ச் 13 அன்று, பாடசாலைகளின் ஒழுக்கத்தில் தலையிடுவதற்காக மனித உரிமைகளின் கருத்துரு குறித்து ஜனாதிபதி சிறிசேன குற்றஞ்சாட்டியதாக 'தமிழ் கார்டியன்| அறிக்கையிட்டிருந்தது. "ஆசிரியர்களின் கடமையில், மனித உரிமைகளின் கருத்துருவின் தலையீடானது சிறந்த எதிர்காலச் சந்ததியொன்றைக் கட்டியெழுப்பும் பணிக்கு சவால் ஒன்றை விடுத்துள்ளது" என சிறிசேன தெரிவித்துள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தக் கூற்றை ஜனாதிபதி செய்த போது, அவர் மாத்தறையில் உள்ள பாடசாலையொன்றில் உரையாற்றினார்.[56,57]

---

[53] https://www.colombotelegraph.com/index.php/sirisena-openly-attacks-human-rights-activists-signals-approval-for-extra-judicial-killings (கடைசியாக ஏப்ரல் 13 அன்று அடையப்பட்டது)

[54]https://www.theguardian.com/world/2019/jan/18/example-to-the-world-sri-lanka-president-plans-to-copy-dutertes-war-on-drugs (கடைசியாக ஏப்ரல் 13 அன்று அடையப்பட்டது))

[55] http://www.colombopage.com/archive_19A/Jan16_1547651080CH.php (கடைசியாக ஏப்ரல் 13 அன்று அடையப்பட்டது)

[56] http://www.dailynews.lk/2019/03/14/local/180195/teachers-have-boundless-duty-create-disciplined-generation-president (கடைசியாக ஏப்ரல் 13 அன்று அடையப்பட்டது)

[57]https://www.tamilguardian.com/content/sri-lankan-president-claims-%E2%80%98human-rights%E2%80%99-are-hindering-discipline-schools (கடைசியாக ஏப்ரல் 13 அன்று அடையப்பட்டது)

### 33. அரசியலமைப்புப் பேரவையினதும், மனித உரிமைகள் ஆணைக்குழுவினதும் மீது ஜனாதிபதி தாக்குதல்

பெப்ரவரி 6 அன்று, பதவியேற்றத்திற்காக ஜனாதிபதியினால் பரிந்துரைக்கப்பட்ட 12 நீதிபதிகளின் நியமனத்தை நிராகரித்த அரசியலமைப்புப் பேரவை மீது வாய்மொழியிலான தாக்குதலொன்றை ஜனாதிபதி ஆரம்பித்தார்.[58] இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவையும் ஜனாதிபதி விமர்சித்ததுடன், இவை சட்டத்தையும், ஒழுங்கையும் தாபிப்பதற்கான அரசாங்கத்தின் முயற்சிகளினுள் அத்துமீறல்கள் எனப் பதப்படுத்தினார். சிறைக் கைதிகளினதும், தண்டிக்கப்பட்ட போதைப்பொருள் குற்றவாளிகளினதும் உரிமைகள் மீது மனித உரிமைகள் ஆணைக்குழுவின் வற்புறுத்தலை அவர் கண்டித்ததுடன், போதைப்பொருள் தொடர்பான குற்றங்களுக்கு மரண தண்டனையை மீளக்கொண்டு வருவதற்கான தனது திட்டங்களை எதிர்க்க வேண்டாம் என மனித உரிமைகள் தாபனங்களுக்கு அழைப்பு விடுத்தார். சுதந்திரமாகச் செயற்படுவதில் இந்த நியதியாக்க நிறுவனங்களினால் எடுத்துக்காட்டப்படுகின்ற முன்னெடுப்புக்கு பதிலிறுப்பாகவே இந்த வாய்மொழியிலான தாக்குதல் என INFORM நம்புகின்றது. நிறைவேற்று அதிகாரங்கள் மீது சமநிலைவாத நியாயத்தின் அங்கமாகச் செயற்படுவதற்கு முயற்சிக்கின்ற இந்த நிறுவனங்களுக்கு எச்சரிக்கையிலான தாக்குதலொன்றே ஜனாதிபதியின் வார்த்தைகள் எனத் தோன்றுகின்றது.

#### ஊ. சுதந்திரங்களுக்கான உத்தேசமான அச்சுறுத்தல்கள்

பௌத்த மதகுருமாரை நோக்கி சமரசமான, ஆனால் உத்தேசமானரீதியில் மக்களின் கருத்துச் சுதந்திரம் மீது கட்டுப்பாட்டிலான நகர்வொன்றாக திரிபிட்டகா என்ற பௌத்த வாசகம் மீது சட்டபூர்வ பாதுகாப்பினை ஜனாதிபதி அளித்தார். நாட்டில் பௌத்த மதத்திற்கான முதன்மை ஸ்தானத்தை அது மேலும் வலுவாக்குகின்றது. கண்காணிப்புச் சாதனங்கள் குறித்த ஜனாதிபதியின் உத்தேசமான கொள்வனவானது, அங்கீகரிக்கப்பட்டால், ஏற்கனவே ஊறுபடத்தக்க மக்களையும், கருத்து வேறுபாட்டினைக் கொண்டிருப்பவர்களையும் கண்காணிப்பதற்கு மறைமுகமாகப் பயன்படுத்தப்படலாம் என்பதுடன், அரசாங்கத்தின் அதிகாரத்தின் அரசியலமைப்பு சாராத உபயோகத்திற்கும் இட்டுச்செல்லலாம்.

### 34. திரிபிட்டகாவுக்கு சட்டபூர்வ அங்கீகாரம் வழங்கப்பட்டது

ஜனவரி 5 அன்று, பாலி, பௌத்த வாசகமொன்றான திரிபிட்டகாவை தேசிய பொக்கி~மாக ஜனாதிபதி பிரகடனப்படுத்தியதுடன், அவ்வாறாக அதற்கு சட்டபூர்வ பாதுகாப்பினையும் வழங்கியுள்ளார்.[59] இனிமேல், அரசாங்கத்திடமிருந்து அங்கீகாரமின்றி திரிபிட்டிகாவின் மொழிபெயர்ப்பினை, மாற்றத்தினை அல்லது பொருள் விளக்கத்தினை பயன்படுத்துவதற்கு அல்லது ஏதேனும் வாசகத்தை வழங்குவதற்கு ஒருவரும் அனுமதிக்கப்படமாட்டார்கள். மேலதிகமாக, நியதியாக்க நூற்கல்விப் பேரவையொன்றினால் மட்டுமே திரிபிட்டிகா மொழிபெயர்க்கப்பட்டு, பதிப்பு செய்யப்பட முடியும். இவ்வழியில் திரிபிட்டிகாவை இழிவுபடுத்துவதற்கான அல்லது திரிவுபடுத்துவதற்கான ஏதேனும் முயற்சியைத் தடுப்பதற்கு அரசாங்கம் தலையிட்டுள்ளதாக

---

[58] https://www.colombotelegraph.com/index.php/sirisena-hits-out-at-constitutional-council-again-questions-cc-decision-to-shoot-down-appointments-of-12-judges-also-attacks-human-rights-commission (கடைசியாக ஏப்ரல் 13 அன்று அடையப்பட்டது)

[59] http://www.newindianexpress.com/world/2019/jan/03/buddhist-scriptures-tripitaka-to-be-declared-part-of-srilankan-heritage-on-january-5-1920196.html (கடைசியாக ஏப்ரல் 13 அன்று அடையப்பட்டது)

ஜனாதிபதி தெரிவித்தார்.[60] திரிபிட்டிகா அல்லது அதன் உள்ளடக்கங்கள் ஆகியவற்றின் ஏதேனும் விமர்சனத்திற்கு எதிராகப் பதிலுக்குச் செய்யும் தீங்கினை இது கொண்டுவரும் என INFORM நம்புகின்றது.



*பிரதிமை - ஊர்வலத்தில் திரிபிட்டகா கொண்டு செல்லப்படுகின்றது - புகைப்பட அனுசரணை – சுதத் சில்வா*

### 35. கண்காணிப்புச் சாதனங்களுக்கு அமைச்சரவையின் அங்கீகாரத்தை ஜனாதிபதி நாடினார்

மார்ச் 21 அன்று, 6-9 பில்லியன் ரூபா பெறுமதியான கண்காணிப்புச் சாதனங்களுக்கான அமைச்சரவையின் அங்கீகாரத்தை ஜனாதிபதி நாடியுள்ளதாக அறிக்கையிடப்பட்டுள்ளது.[61] திட்டத்தின் கூருணர்விலானதன்மையினதும் அத்துடன் இரகசியத்தன்மையின் அவசியத்தினதும் காரணமாக, வழமையான கொள்வனவு நடைமுறையைப் பின்பற்ற முடியாது என ஜனாதிபதி தெரிவித்தார். ஜனாதிபதி வாக்குறுதியளித்துள்ள போதைப் பொருள்களைக் கட்டுப்படுத்துவதற்கு கண்காணிப்பு சாதனங்கள் இருக்கலாம் எனப் புரிந்துகொள்ளப்பட்டுள்ளது. சாதனங்களுக்கு அமைச்சரவை அங்கீகாரம் கிட்டினால், கொள்வனவு செய்யப்படும் என்றும், நகரத்திற்குரிய ஈடுபாட்டுக்கும், ஊறுவிளைவிப்பதற்கும் அத்துடன் கருத்து வேறுபாட்டினைத் தடுப்பதற்கும் பெரும் கண்காணிப்புக்கு பயன்படுத்தப்படும் என்பதையிட்டு INFORM கரிசனையைக் கொண்டுள்ளது.

---

[60] http://www.ft.lk/news/Will-mediate-to-make-Tripitaka-World-Heritage--President/56-670315 (கடைசியாக ஏப்ரல் 13 அன்று அடையப்பட்டது)

[61] https://www.colombotelegraph.com/index.php/sri-lankan-govt-to-spend-6-9-billion-rupees-for-interception-equipment-in-the-name-of-the-war-on-drugs/ (கடைசியாக ஏப்ரல் 13 அன்று அடையப்பட்டது)